# தொழிலாளி

இலங்கை தொழிற் சங்க சம்மேளன வெளியீடு

விலை சதம் 10 | இந்தியாவில் 10 நயா பைசா | பக்கங்கள் 8

முரசு 1 | 15—7—63 | ஒலி 5


## ஆலைப் போராட்டத்திற்கு நிதி தாருங்கள்

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயற் குழுக்கூட்டம் ஜுலை 11ம் திகதி நடைபெற்றது. அக் கூட்டத்தில் வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்கள் களின் போராட்டத்திற்கு நிதி சேர்ப்பதென முடிவெடுக் கப்பட்டது. இந்நிதிக்கு ஒவ்வொரு அங்கத்தவரும் ரூ. 1/– அளிக்கவேண்டுமென சம்மேளனம் வேண்டுகிறது.

வெளியிலுள்ள அங்கத்தவர்களையும் நண்பர்களையும் அரிசி, தேங்காய், மரவெள்ளிக்கிழங்கு போன்றவைகளைத் தந்து உதவும்படி சம்மேளனம் வேண்டுகிறது. சகல நிதி யும் தனதிகாரி, இ.தொ.ச.ச., 123, யூனியன் பிளேஸ், கொழும்பு 2., என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

# வெள்ளவத்தை ஆலையில் வேலை நிறுத்தம்!

## 22 கோரிக்கைகளுக்காக 2200 தொழிலாளர் போராட்டம்

வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்கள் 2200 பேர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் கடந்த வாரம் இறங்கியுள்ளனர். தொழிலாளர் கள் மத்தியில் தோன்றிவரும் கொந்தளிப்புக்கு இது மற்றுமோர் எடுத்துக் காட்டு. தங்களுடைய இருபது கோரிக்கைகளுக்கு ஆதரவாகவே இவர் கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். பேச்சுவார்த்தைகளின் மூலம் கோரிக் கைகள் பற்றி ஓர் உடன்பாடு காண எடுத்த சகல முயற்சிகளும் தோல்வி யுற்றது. அதன் முடிவிலேயே இவ்வேலை நிறுத்தம் தொடங்கியது.

அதேநேரத்தில் ஐந்து வாரங்களாக புறுக்போன்டிலும், மூன்றுவாரமாக விட்டோல் பவுட்சட்டிலும் நடைபெற்றுவந்த வேலை நிறுத்தம், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்திற்கும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற் கும் ஏற்பட்ட உடன்பாட்டின் காரணமாக முடிவடைந்தது. அந்த இரு ஸ்தாபனத்தொழிலாளர்களும் 11ம் திகதி காலையில் வேலைக்குத் திரும்பினர்.

இவ்வித உடன்பாடுகள் 10–ம் திகதி காலையில் ஏற்பட்டதன் காரண மாக அன்று பிற்பகல் தேயிலை, றப்பர், தெங்கு ஏற்றுமதித் தொழிலாளர்கள் நடத்தவிருந்த அரைநாள் வேலை நிறுத்தம், இலங்கைத் தொழிற் சங்க சம் மேளனத்தினால் வாபஸ் பெறப்பட்டது.

வெள்ளவத்தை தொழிலாளர்களின் கோரிக்கைகள் இவ்வருடம் பெப் ரவரி மாதம் 2–ம் திகதி நிர்வாகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆலைத்தொழி லாளர்களின் சார்பாக அவர்கள் இணைந்துள்ள ஐக்கிய என்ஜினியரிங் தொழி லாளர் சங்கத்தினால் இக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அண்மையில் வேறு இரண்டு கோரிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. இக்கோரிக்கை களுக்கு ஆதரவாகவே ஆலைத் தொழிலாளர்கள் இன்று போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

வேலை நிறுத்தம் வெற்றிகர காக நடைபெறுகிறது. எங்கள் சங்கத்தில் அங்கத்துவம் வகிக் காத, ஏனைய சங்கங்களிலுள்ள தொழிலாளர்களும்வேலைநிறுத் தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கோரிக்கைகள் பற்றி கடந்த பல மாதங்களாக சங் கத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் அவை பலனளிக்கவில்லை. இம்மாதம் 6ம், 7ம் திகதிகளில் தொழில் இலாகா இருபக்கத்தினரையும் அழைத்து ஓர் மாநாட்டை நடத்தியது. அதிலும் ஓர் முடிவு ஏற்படவில்லை. இம்மாதம் 9ம் திகதி தொழில் மந்திரி ஓர் மாநாட்டிற்கு ஏற்பாடு செய் தார், அதிலும் பலனில்லாமல் போயிற்று. ஆகவே சகல வழி களிலும் சமரசம் ஏற்படாமல் போகவே, இம்மாதம் 10–ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு சகல தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர்.

கோரிக்கைகளை வென்றெடுக் கும்வரை வெளியில் நின்று போராடுவதென்ற மன உறுதி யுடன் தொழிலாளர்கள் விளங் குகிறார்கள்.

## புறுக்போன்ட் தொழிலாளர்கள் வெற்றியோடு வேலைக்குத் திரும்பினர்

புறுக்போன்ட் வேலை நிறுத் தம் சம்பந்தமாக இலங்கை தொழிற் சங்க சம்மேளனத் திற்கும் இலங்கை முதலாளி கள் சம்மேளனத்திற்குமிடை யில் ஓர் உடன்பாடு ஏற்பட் டது. தொழில் மந்திரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் பேச்சுவார்த்தையிலேயே இவ் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன் பாட்டைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் முடிவடைந் தது.

கீழ் காணும் உடன்பாடுகள் ஏற்பட்டன :


1 பெட்டிகளில் அடைக்கும் பகுதிக்கு தொழிலாளர்களைச் சேர்பது பற்றி தொழிலாளர் கள் சமர்ப்பிக்கும் பெயர்ப் பட்டியலில் இருந்து 20 பேர் களை சேர்ப்பது எனவும், ஆனால் அவர்கள் தகுதியானவர்களாக பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

2 ஒரு வருடத்திற்கு இரண்டு செட் யூனிபோம் ஒவ் வொரு தொழிலாளிக்கும் வழங்க நிர்வாகம் ஒப்புக் கொள்கிறது. இந்த வருடம் வழங்கப்பட வேண்டிய யூனி போம் இயன்றளவு விரைவில் வழங்கப்படும்.

3 ஒவ்வொரு நிரந்தர தொழிலாளிக்கும் ஒரு ருத்தல் தேயிலை இனமாக வழங்க நிர் வாகம் ஒத்துக்கொள்கிறது. இதற்கு மேலாக குறைந்த விலைக்கு தேயிலை கொடுப்பது பற்றி பிறகு நடக்கும் பேச்சு வார்த்தைகளில் எடுத்துக் கொள்ளப்படும்.

4 ஏனைய விடயங்கள் விரை வில் ஓர் பேச்சுவார்த்தையில் எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வுடன்படிக்கை இம் மாதம் 11ந் திகதி இருபக்கத் தினராலும் கையெழுத்திடப் பட்டது.



வேலை நிறுத்தம் செய்துள்ள ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் தோழர் எம். ஜி. மெண்டிஸ் பேசிக்கொண்டிருக்கிறார்.

## விட்டோல் பவுட்சட் வேலை நிறுத்தம் முடிந்தது

## விலக்கப்பட்டவருக்கு மீண்டும் வேலை!

விட்டோல் பவுஸ்டட் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு மீண் டும் வேலைக்குச் சென்றுவிட்ட னர். இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்திற்கும் முதலாளி கள் சம்மேளனத்திற்கும் ஏற் பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்தே இவ் வேலைநிறுத் தமும் முடிவடைந்தது.

இவ் வேலை நிறுத்தத்தை யொட்டி கீழ்காணும் உடன் பாடு ஏற்பட்டது :

1 வேலை நீக்கம் செய்யப் பட்டவர்களில் ஒருவராகிய நோனிஸ் பர்ணாந்துக்கு மீண் டும் புதியவர் என்ற முறை யில் வேலை கொடுக்கவும், விலக்கப்பட்ட பொழுது வழங் கிய அதே சம்பளத்தை வழங்க வும் நிர்வாகம் ஒப்புக்கொண் டது. அதே நேரத்தில் அத் தொழிலாளி வேலைக்கு வரு வது சீர்திருந்தும் என்று சங் கம் உறுதியளித்துள்ளது. விலக்கப்பட்ட மற்ற தொழி லாளியாகிய சோமபாலாவின் பிரச்சினை ஓர் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தரிடம் சமர்பிக் கப்படும்.

2 சகல தொழிலாளர்களுக் கும் 50 சத வீதம் ஒரு ருத்தல் தேயிலை வழங்க நிர்வாகம் ஒப் புக்கொள்கிறது. இதற்குமேல் குறைந்த விலையில் தேயிலை வழங்குவது பற்றி பின்பு விவா திக்கப்படும்

3 ஏனைய சகலபிரச்சினைகளும் விரைவில் ஓர் பேச்சுவார்த்தை யில் எடுத்துக்கொள்ளப்படும்.

# இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கத்தின் 16-வது மாநாட்டுத் தீர்மானங்கள்

## 1 அரசியல் தீர்மானம்

எங்களுடைய நாட்டிலும் உலகத்திலும் முற்போக்கு சக்திகள் மேலும் வளர்ந்து பலம் பெற்றுள்ளதைக் கண்டு இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்க 16வது மாநாடு தன் இதயபூர்வமான மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்றுவரும் தேசிய விடுதலை இயக்கத்திடம் உலக ஏகாதிபத்தியம் பெரும் தோல்விகளைக் கண்டுள்ளது. மக்களுடைய விதியை நிர்ணயிக்கக் கூடிய சக்தி அதனிடமில்லை. அதே வேளையில் உலக சமாதானத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும், சோஷலிஸத்திற்காகவும் நிற்கக்கூடிய அளவுக்கு மாற்றக்கூடிய சக்தி சோஷலிஸ முகாமின் தலைமையில், முற்போக்குச் சக்திகள் இன்று பெற்றுள்ளன. உலக ஏகாதிபத்தியம் ஓர் உலக யுத்தத்தை ஆரம்பிக்காமல் தடுக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் சக்திபெற்றுள்ளனர். ஆயினும் அங்கோலா, தென்வியட்நாம், லாவோஸ், புறூணி போன்ற காலனி நாட்டு மக்களின்மேல் உள் நாட்டு யுத்தங்களை நடத்தி, அந்த நாட்டு மக்களை கொடுமைப்படுத்தும் நிலையில் இன்றும் ஏகாதிபத்தியம் இருக்கிறது.


ஏகாதிபத்தியத்தை முற்றுக ஒழிக்க விடுதலைப்போராட்டங்களுக்கும் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்கும்ஆதரவளிப்பது உலக தொழிலாளி வர்க்கத்தின் பிரதான கடமை என இந்த மாநாடு கருதுகிறது. ஏகாதிபத்தியம் முற்றுக ஒழிக்கப்பட்டு, குறைந்தபட்சம் பெரிய ஏகாதிபத்திய ஏற்படும் நாடுகளிலும் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிதான் நிலையான உலக சமாதானத்தை ஏற்படுத்தும்.

இலங்கையிலும் முற்போக்கு சக்தி வளர்ந்துள்ளது என்பதை இம்மாநாடு மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறது. குறிப்பாக சமீபகால அரசியலில் எவ்வித சந்தேகத்திற்குமிடமின்றி முக்கியமானதாகத் திகழும் இடதுசாரிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையும், இடதுசாரி ஐக்கிய முன்னணியையும் இம்மாநாடு வரவேற்கிறது. ஏகாதிபத்திய, நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு இயக்கத்தை சரியாக நிறைவேற்ற சுதந்திரக் கட்சி அரசாங்கம் தவறியதை சாதகமாக்கி மீண்டும் ஆட்சிக்கு வர யூ. என். பி. முனைகின்ற இந்த நேரத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டமை இந்த நாட்டு அரசியல் வாழ்க்கையில் புதிய பாதையைக் காட்டியுள்ளது. இந்த நாட்டு தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு இது ஓர் புதிய நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்துள்ளது.

சம்பள உயர்வுக்காகவும், தாங்கமுடியாத வாழ்க்கைச் செலவினுலும் சகல பகுதிகளிலும் வெடித்துக்கொண்டிருக்கும் தொழிலாளர் போராட்டங்களுக்கு உறுதியான தலைமை அளிக்கும்படி இடதுசாரி ஐக்கிய முன்னணியை வேண்டுகிறது இம்மாநாடு. இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைமையில் சுதந்திரக் கட்சிக்குள்ளும் அவர்களுக்கு பின்னல் உள்ளது மற்ற ஏனைய முற்போக்கு சக்திகளையும் உள்ளடக்கிய ஓர் புதிய முன்னணியின் மூலமே இந்தக் கடமையை நிறைவேற்றமுடியும்.

## 2 பழி வாங்கல்

இந்த வருடத்தின் ஜனவரி பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற இ.போ.ச. தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றியவர்களைப் பழி வாங்குவதில்லை என்று பாராளுமன்றத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியதற்காக இம்மாநாடு தொழில் தேசியமய அமைச்சரைக் கண்டிக்கிறது. வேலை நிறுத்தத்திற்கு முன்பு வேலை செய்த பாதைகளுக்கு மீண்டும் தொழிலாளர்களை மாற்றும்படி இ.போ.சவை இம்மாநாடு வேண்டுகிறது. அத்தோடு தண்டிக்கும் முறையில் மாற்றம் செய்யப்பட்டது, வேலை நீக்கம் மற்றும் இதுபோன்ற பழிவாங்கல்களை ரத்துச்செய்யுமாறும் இம்மாநாடு வேண்டுகிறது.



அமைப்பாளர் இ.மோ.தொ.ச.
தோழர் தம்மிக்க குணதாச

வேலை நிறுத்தம் முடிவடைந்தவுடன், வேலை நிறுத்தம் செய்த தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைநடத்துவதாக கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறியமைக்காகவும் தொழிற் தேசியமய அமைச்சரை இம்மாநாடு கண்டிக்கிறது. வேலை நிறுத்தத்திற்குப் பிறகு ஒரு கூட்டுக் குழுக் கூட்டத்தைக் கூட கூட்ட முனையாத இ.போ.ச. வையும் இம்மாநாடு கண்டிக்கிறது. கூட்டுக் குழுக் கூட்டங்களின் மூலம் தொழிற் சங்கங்களோடு மீண்டும் ஆலோசனைகள் நடத்தும்படியும் இ. போ. ச.வை இம்மாநாடு வேண்டுகிறது.



இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தினதும்,
இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கத்தினதும் தலைவர்
**தோழர் எம். ஜி. மெண்டிஸ்**

## 3 கோரிக்கைகள்

இ. போ. ச. தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு மீண்டும் இம்மாநாடு தனது ஆதரவைத் தெரிவிக்கிறது. இக் கோரிக்கைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தி ஓர் சமரசமான முடிவுக்கு வருவதற்கு உடனடியாக கூட்டுக் குழுக் கூட்டத்தை நடத்தும்படி இ. போ. ச.வை வேண்டுகிறோம். அவ்விதம் ஓர் சமரசம் ஏற்படாவிடில், மீண்டும் அக் கோரிக்கைகளுக்காகப் போராட, கடந்த போராட்டத்தில் கலந்துகொண்ட மற்ற இரு சங்கங்களோடும் கலந்துபேசி அங்கத்தவர்களைப் போராட்டத்திற்கு தயார் செய்யும்படி புதிய பொதுக்குழுவை இம்மாநாடு வேண்டுகிறது. அத்தோடு எதிர்காலத்தில் இ. போ. ச. தொழிலாளர்களின் போராட்டம் தனிப்பட்ட போராட்டமாக இராமல், உடனடியாக சம்பள உயர்வுக்கும், தாங்க முடியாத வாழ்க்கை நிலைக்கு எதிராகவும் போராடுவதற்காக முக்கிய ஆறு தொழிற் சங்க மத்திய ஸ்தானங்களினல் தயாரிக்கப்பட்டுவரும் பொது தொழிற்சங்க போராட்டத்தின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும் எனவும் வேண்டுகிறது. இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் ஆலோசனையுடன் இது சம்பந்தமாக மேலும் நடவடிக்கை எடுக்கும்படியும் பொதுக்குழுவை இம்மாநாடு வேண்டுகிறது.

## 4 சந்தா

எங்களுடைய சங்கத்தின் வேலைகள் அதிகமாயிருப்பதால் அதற்கு தற்பொழுது அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்படும் 50 சதம் சந்தா ஈடுசெய்ய முடியாமலிருப்பதால் புதிய பொதுக்குழு அகில இலங்கை ஐக்கிய மோட்டோர் தொழிலாளர் சங்கத்தோடும், சமஸ்த லங்காமோட்டோர் சேவக சமித்தியோடும் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டான முறையில் மூன்று சங்கங்களும் சந்தாவை ரூபா 1/-க்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி இம்மாநாடு வேண்டுகிறது.

## இ. மோ. தொ. ச. மாநாட்டிற்கு சீன தொழிலாள்ர் களின் வாழ்த்து.

இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கத்தின் 16வது மாநாட்டிற்கு சகோதரப் பிரதிநிதியாக மக்கள் சீனத்திலிருந்து தோழர் சீ ஆ ஓ குன்சி அவர்கள் வந்துள்ளார்கள். அவர் உலக போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனத்தின் உபதலைவர், மாநாட்டிற்கு அவர் கீழ்காணும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்சத்தின் 16வது மாநாடு நடைபெறுகின்ற இவ்வேளையில் சீன தெரு போக்குவரத்து தொழிலாளர் தொழிற் சங்கமும், முழு சீன போக்குவரத்து தொழிலாளர்களும் தமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கத்திற்கும், சகல சகோதரத்துவ போக்குவரத்து தொழிலாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

ஏகாதிபத்தியத்திற்கும் காலனி ஆதிக்கத்திற்கும் எதிரான போராட்டத்தில் மேலும் சீன-இலங்கை தொழிலாளர்களினதும் தொழிற் சங்கங்களினதும் ஒற்றுமை உறுதியாக்கப்பட்டு வளர்ச்சி பெறுவதாக. அதன்மூலம் உலக சமாதானமும் தேசிய சுதந்திரமும், ஜனநாயகமும் சமூக முன்னேற்றமும் வளர்ச்சி பெறுவதாக.

உங்கள் மாநாட்டிற்கு சகல வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம்.

## இங்கிரியா வேலை நிறுத்தம் தொடர்கிறது.

இங்கிரியா பகுதியிலுள்ள இங்கிரிய குரூப் தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளுக்காக இரண்டு மாதங்களுக்கு முன்பு வேலை நிறுத்தம் செய்தது தெரிந்ததே. அத்தொழிலாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இரண்டு மாதங்களைக்கடந்து விட்டபோதிலும் இங்கிரிய குரூப் தொழிலாளர்கள் எவ்வித தயக்கமுமின்றி உறுதியுடன் போராடிக்கொண்டிருக்கின்றனர். தொழிலாளர்களினல் தொடர்ந்து சில நாட்களுக்குத்தானும் போராடமுடியாதென்று தோட்ட நிர்வாகத்தின் கற்பனை கனவாகிவிட்டது. உறுதிமிக்க தொழிலாளர்கள் நிச்சயமாக பிடிவாதம் பிடிக்கின்ற காட்மிராண்டி நிர்வாகத்தை முறிபடித்துவெற்றி பெறுவர் என்பது நிச்சயம்.

**தலையங்கம்**

## சிந்திய ரத்தம் வீணுகக்கூடாது!

ஆட்சியினரின் தொழிலாள விரோதப்போக்கு மற்றுமொரு உயிரைக் குடித்துவிட்டது, ஓர் இன மங்கையின் வாழ்க்கையைப் பலி கொண்டுவிட்டது. கடந்த வாரம் தன்னுயிரைத் தியாகம் செய்த பி. கே. வித்தானகே சகலரின் அனுதாபத்திற்குமுரியவர். ஆட்சியினரைத் தவிர்ந்த மனிதாபிமானம் கொண்ட, குறிப்பாக சகல தொழிற்சங்க இயக்கத்தினரும் அவருக்காக கண்ணீர் சிந்தியிருப்பர்.

செல்வி வித்தானகே இந்தநாட்டு தொழிற்சங்க இயக்கத்திற்காக, உதவி தாதிமார்களின் நியாயமான கோரிக்கைக்காக தன்னுயிரை மாய்த்துள்ளார். அவருக்கு மரியாதை செலுத்துகின்ற பல்லாயிரக்கணக்கான மக்களோடு நாமும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

இவ்விதமான தனிப்பட்டவர்களின் செயல்களில் எமக்கு நம்பிக்கையுமில்லை. அதை நாங்கள் ஆதரிப்பதுமில்லை. நாங்கள் ஐக்கியத்தில், தொழிலாளி வர்க்கத்தின் ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள். ஆனுல் இந்த துக்ககரமான நிகழ்ச்சியின்மூலம் ஓர் உண்மை புலனுகிறது.

வருடக்கணக்காக உதவிதாதிமார்கள் தங்கள் நியாயமான கோரிக்கைக்காக பேச்சுவார்த்தை நடத்திவந்துள்ளனர். ஆனுல் அரசாங்கத்தின் பிடிவாதமான, இரக்கமற்ற போக்கு எவ்வித முடிவும் ஏற்படாமல் தடுத்தது. இதனுல் தாதிமார்கள் மனமுடைந்தனர்; வேதனையுற்றனர். இந்நிலையின் பிரதிபலிப்புத்தான் இந்த துக்ககரமான சம்பவம்.

அரசாங்கத்தின் தொழிலாள விரோதப் போக்குத்தான் இச்சம்பவத்திற்கு காரணம். தங்களுடைய ஒருசில கோரிக்கைகளைத் தானும் இந்தநாட்டு தொழிற் சங்கங்களினுல் பெற்றெடுக்க முடியாத நிலமை அரசாங்கத்தினுல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக தொழிலாளவர்க்கத்தின் மத்தியில் வளர்ந்துவரும் மனக்கொதிப்பின் பிரதிபலிப்புத்தான் செல்வி வித்தானகே. இது அரசாங்கத்திற்கு ஓர் சிறந்த எச்சரிக்கை,

சகல தொழிற்சங்க இயக்கமும் இன்று கொந்தளித்துக்கொண்டிருக்கின்றன. இந்த தற்கொலை அரசாங்கத்தின் கண்களைத் திறந்திருக்கவேண்டும். நிலவுகின்ற கொந்தளிப்பின் பிரதிபலிப்புத்தான் இத் தற்கொலை என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் மக்கள் போராட்டத்திற்கும் இது ஓர் நல்ல எடுத்துக்காட்டு.

அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற தன்மையை, காட்டுமிராண்டிப் போக்கை, தொழிலாள விரோதக் கொள்கையை அம்பலப் படுத்திய காலம்சென்ற வித்தானகே அவர்களுக்கு எங்கள் அங்கத்தவர்கள் அனைவரையும் தொழிற்சங்க இயக்கத்தின் சார்பாக இறுதி மரியாதை செலுத்தும்படி அழைக்கிறேம். அவர் சிந்திய இரத்தம் வீணுகாமல் காப்பது எமது கடமை. அவரின் ஞாபகார்த்தமாக எங்கள் செங்கொடியைத் தாழ்த்துகிறேம்.

## மீண்டும் போராடுவோம்!

இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கம் தனது 16 வது மாநாட்டை இந்தநேரத்தில் நடத்திக் கொண்டிருக்கிறது. இ. போ. ச. தொழிலாளர்களினதும் ஏனைய மோட்டோர் தொழிலாளர்களினதும் நலன் காப்பதில் இன்று வரை இ.மோ.தொ.ச. முன்னின்று அயராது உழைத்து வந்திருக்கிறது.

கடந்த மாநாட்டிற்கு பிற்பட்ட காலம் பெரும் சோதனை மிக்கதாகவும், பல அரிய வீரச்சாதனைகளை நிலை நாட்டியதாகவும் இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கத்திற்கு திகழ்ந்துள்ளது. ஆகவே இம்மாநாட்டில் பங்குபற்றும் சகல தொழிலாளர்களும் மனமகிழ்வு கொள்ளவும், எதிர்காலத்திற்குரிய போராட்டங்களுக்கு தம்மை தயார்படுத்திக்கொள்ளவும் இம் மாநாடு நிலைக்களனுகத் திகழும்.

இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கத்தின் கடந்தகால, சிறப்பான சாதனைகள்பல உண்டு. அவற்றுள் சென்ற வருடம் நடைபெற்ற இ. போ. ச. தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின்போது அது அளித்த சக்திமிக்க தலைமை பெரிதும் மெச்சத்தக்கதொன்ருகும்.

அப்பொழுது அரசாங்கத்தின் கெடுபிடிக்கும், மந்திரிமார்களின் கருங்காலி வேலைகளுக்கும், ராணுவ பொலிஸ் மிரட்டல்களுக்கும் மத்தியில் இ.போ.ச. தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி உறுதியான முறையில் இ. போ. ச. தொழிலாளர்களின் வரலாறு காணுத வீரம்மிக்க போராட்டத்திற்கு தலைமையளித்து, அரசாங்கத்தின் பொய்ப்பிரச்சாரங்களை, வதந்திகளை முறியடித்து தொழிலாளர் நலன்காப்பதில் முன்னணி படையாக விளங்கியதை எவரும் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.

வேலை நிறுத்தம் கால சூழ்நிலைகளுக்காக தற்காலிகமாக ஒத்தி போடப்பட்டுள்ள பொழுதிலும் இ. போ. ச. தொழிலாளர்களின் கோரிக்கைகளை இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கம் மறந்துவிடவில்லை. தொடர்ந்து தனது அங்கத்தவர்களை மீண்டும் தமது கோரிக்கைகளுக்காகப் போராடவும், அரசாங்கத்தின் தொழிலாள விரோதக் கொள்கைகளை முறியடிக்கவும் தயார்படுத்தி வருகிறது.

ஆனுல் அடுத்த போராட்டத்தில் இ.போ.ச. தொழிலாளர்கள் நிச்சயமாக வெற்றிபெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. அடுத்த போராட்டத்தில் அவர்கள்தனித்து நின்றுபோராடப் போவதில்லை. இந்நாட்டிலுள்ள சகல தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகளுக்கான ஐக்கிய போராட்டத்தில் அவர்கள் ஈடுபடத்தயாராகிக் கொண்டிருக்கிருர்கள்.

ஆகவே அவர்களின் எதிர்காலத் திட்டத்தை வகுக்க, ஐக்கியத்தை வளர்க்க இம் மாநாடு வழிவகுக்கவேண்டுமென வாழ்த்துகிறேம்.

## சினிமாத் தொழிலாளர்கள் வருடாந்த விழாவிற்கு தயாராகுகின்றனர்

இலங்கை சினிமாப் படத் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்திர விழாவைச் சிறப்பாக கொண்டாட சகல படக்காட்சி சாலைகளிலுமுள்ள ஊழியர்கள் தயாராகுகின்றனர்.

கடந்த ஜுன் 25ம் திகதி கூடிய செயற்குழு எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் தங்களது விழாவை கொண்டாடுவதென தீர்மானித்தது.

சினிமா ஊழியர்களது உரிமைகளுக்காகவும், கோரிக்கைகளுக்காகவும், கடந்த சில நாட்களாக இலங்கை பூராவும் சினிமா ஊழியர்கள் சங்கம் பலமான ஒரு இயக்கத்தை நடத்திச் சென்றது. அதன் பிரதிபலனுக இலங்கையிலேயே முதன் முதலாக சினிமாஸ், சிலோன் என்டடெயின்மன்ஸ் ஸ்தாபனத்தின் ஊழியர்களுக்கு அரசாங்கப் பஞ்சப்படி கொடுக்கப்பட வேண்டுமென தொழில்கோட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது.

சினிமா ஊழியர் சங்கத்தின் சார்பில் கிடைக்கப்பெற்ற இவ் வெற்றியின் பிரதிபலனுக சினிமாத் தொழிலாளர் வேறுபல சங்கங்களிலிருந்து ராஜினுமா செய்துவிட்டுநூற்றுக்கணக்கில் நமது சங்கத்தில் வந்து சேர்கின்றனர்.

குறிப்பாக சிலோன் தியேட்டர்ஸ் ஊழியர்கள் இப்பங்கில் விசேஷமாக குறிப்பிடப்பட வேண்டியவர்களாகும். இப்பொழுது இலங்கை சினிமாத் தொழிலாளர் சங்கம் அரசாங்க பஞ்சப்படியை சிலோன் தியேட்டர் ஊழியர்களுக்கு எடுத்துக் கொடுப்பது சம்பந்தமாக எமது சங்க சிலோன் தியேட்டர் கிளை நடவடிக்கையிலீடுபட்டுள்ளது.

ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் சங்க வருடாந்திர மகாநாட்டில் சினிமா ஊழியர்களது அரசாங்க பஞ்சப்படி சம்பந்தமாகவே முக்கியமாக விவாதிக்கப்படும்.

கொழும்பிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமுள்ள சினிமா ஊழியர்கள் இவ்வருடாந்த விழாவை முன்னிட்டு மிகசுறுசுறுப்புடன் வேலைசெய்கின்றனர். பிறபகுதிகளிலுள்ள ஊழியர்களுக்கு வருடாந்திர விழா சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகளை உடனடியாக அனுப்பி வைப்பதற்குரிய முயற்சிகள் நடைபெறுகின்றன என்று சங்கக் காரியதரிசி 'தொழிலாளி' பத்திரிகையின் நிருபரிடம் அறிவித்தார்.

(ந–நி)

## தொழிலாளர் வெற்றி பெற்றனர்

இருபத்தொரு கோரிக்கைகளை முன்வைத்து மே மாதம் 4ந் திகதி தொடக்கம் வேலை நிறுத்தம் செய்துவந்த ஹல்வத்துர தோட்டத் தொழிலாளர்கள் 42 நாட்களுக்குப்பிறகு தங்களது கோரிக்கைகளை வெற்றியீட்டிக்கொண்டு மீண்டும் வேலைக்குத் திரும்பினர். இப்போராட்டத்தின் போது நிர்வாகிகளினது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான தோழர் எஸ். பி.விஜயசேனுவின் ஈமச்சடங்கு இங்கிரியாவிலிருந்து ஹல்வத்துராவுக்கு நீண்டபெரும் ஊர்வலத்துடன் எடுத்துச் செல்லப்பட்டது. சுற்றுச் சூழலிலுள்ள தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களும் மற்றும் ஏனைய இடதுசாரி அனுதாபிகளுமாக மூவாயிரத்திற்கு மேற்பட்டோர் இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

## அரிசி மில் போராட்டம்

அப்துல் ஹலி கம்பெனிக்குச் சொந்தமான அரிசிமில்லில் கடமையாற்றும் தொழிலாளர்கள் பத்து தினங்களாக நடத்திவந்த வேலை நிறுத்தத்தில் தங்களது கோரிக்கையை வெற்றியீட்டிக்கொண்டு மீண்டும் வேலைக்குச் சென்றனர்.

திரு. கோபாலை அனுவசியமாக வேலையிலிருந்து நீக்கியதை கண்டித்தும், எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக தமது சக தொழிலாளியை வேலைக்கு எடுக்கவேண்டுமெனவும் மில் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக மில் நிர்வாகிகள் கோபாலுக்கு மீண்டும் வேலை கொடுப்பதென ஒப்புக்கொள்ளவே தொழிலாளர்கள் வெற்றியுடன் வேலைக்குச் சென்றனர்.

## செங்கொடிச் சங்கத்தில் சேருவோம் வாரீர்

(தீயத்தலாவையைச்சேர்ந்த உடவளை டிவிசனிலுள்ள எம். எஸ். பரமன் என்ற இளைஞர் எழுதிய இச்சிறு கட்டுரையை பெருமையோடு பிரசுரிக்கிறேம். தோட்டத்திலேயே பிறந்து, தோட்டத்தொழிலாளியின் வாழ்வினை கண்டு, தாங்கமுடியாத மனத்துயரே இக்கட்டுரையை எழுத அவரைத் தூண்டியுள்ளதென்பதைக் கட்டுரையை வாசிக்கும்பொழுது தெரிந்துகொள்ளலாம்.)

மனிதன்வானவெளிக்குசெல்கிருன். உலகம் விஞ்ஞானத் துறையில் வெற்றி முரசம் கொட்டுகிறது. படிப்பிலும், அறிவிலும் உலக மக்கள் உயர்ந்து காணப்படுகின்றனர். ஆனுல் தோட்டமக்களைப் பொறுத்தவரையில் உலகம் இன்னும் முன்னேறவில்லை என்று எம்மை பார்ப்போர் கண்ணீர் வடிப்பர். இத்தனைக்கும் நாம் உழைக்கவில்லையா? உறங்கி மடிகின்ருேமா? இல்லவே இல்லை. ஈழத்திருநாட்டிலேயே உழைப்பால், தியாகத்தால் சிறந்தவன் மலையகத் தோழன். ஆனுல் அவன் முன்னேறவில்லை. தொழிற் சங்கங்கள் பல உண்டு அவனுக்குப்பாதைகாட்ட. ஆனுல் அவை காட்டும் பாதை சரியானதா என்பதுதான் கேள்வி. தொழிலாளர்கள் குடியிருக்கும் லயின்களை எடுத்து ஆராய்வோம். ஒரு சிறு அறை. இந்த அறைகளில் வாழ்பவர்கள் எத்தனைபேர்? தாய், தந்தை, அண்ணன், அண்ணி, அக்கா, தங்கை, தம்பிகள் மொத்தம் 12 பேர் இருப்போம். பத்து அடிகொண்ட காம்பறைகளில் 12 பேர் கொண்ட குடும்பம் வசதியோடு எப்படி வாழ முடியும். மறு புறம் 5 பேர் அல்லது நான்கு பேர் உள்ள ஒரு அறையை இரண்டாகப் பிரித்து வேறுகுடும்பத்திற்கு கொடுக்கிறது தோட்ட நிர்வாகம். சுகாதாரம் எங்கே? சுத்தம் எங்கே? தொழிலாளர்கள் காலையில் ஆறுமணிக்குவேலைக்கு சென்ருல் திரும்புவதோ மாலை ஆறு அல்லது ஏழு மணி. இந்நிலையில் குழந்தைகள் பராமரிப்பு, குழந்தைகளின் உணவு வசதி எப்படி இருக்கும் என்பதை விளக்கவேண்டியதில்லை. பிள்ளைகளைப்பார்த்துக்கொள்ள பிள்ளை மடுவம் சில தோட்டங்களில் உண்டு. அது ஒரு மாட்டுக்கொட்டில் போன்றேயிருக்கும். வய்துவந்த குழந்தைகளின் படிப்பு எப்படியென்ருல் அதுபெரும் பிரச்சினை.

இந்த நிலையினை ஒழித்து, தோட்டத் தொழிலாளர்கள் நல்ல வாழ்வு பெற தோழர்களே! செங்கொடி சங்கத்தில் சேருங்கள். சேர்ந்து ஒன்றுபட்டு உரிமைக்கு போராடுவோம். ஒன்றுபட்டு ஓரணியில் இலங்கைத்தோட்டதொழிலாளர் சங்கத்தில் மக்களை சேருங்கள். வாழ்க தொழிலாளி! வளர்க செங்கொடி சங்கம். வீழ்க பிற்போக்கு தொழிற் சங்கங்கள். வெல்க முற்போக்கு சங்கங்கள்.

## பீடி தொழிலாளர்களின் வெற்றி

மாலனல்லைப் பகுதியில் ஆர். வீ. ஜி. பீடிக் கம்பெனிக்கு ஓர் கிளை ஸ்தாபனம் இருந்தது. அங்கு பல தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர். திடீரென கம்பெனி நிர்வாகம் அவ்ஸ்தாபனத்தை மூடியது. அதனுல் அத்தனை தொழிலாளர்களும் வேலையிழந்தனர்.

கம்பெனி நிர்வாகத்தின் இப்போக்கு நீதியற்றது என எமது ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கம் தொழில் மத்தியஸ்த சபையில் வழக்கொன்றைபதிவு செய்தது. தனது அங்கத்தவர்களின் சார்பாக சங்கம் கடுமையாக வாதாடியதின் பயனுக வேலையிழந்த தொழிலாளர்சகலருக்கும் நஷ்ட ஈடாக ரூபா 1800 வழங்கும்படி தொழில் மத்தியஸ்த சபை தீர்ப்பளித்துள்ளது.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கத்தின் இவ்வெற்றிமேலும் பல பீடித் தொழிலாளர்கள் எம்முடைய சிறந்த தொழிற் சங்க பணியினை உணரவும் எம்முடன் இணையவும் செய்துள்ளது.

# தொழிலாளி வர்க்கத்தின் மேலும் பல கடமைகள்!

கம்யூனிஸ்ட்டுகள் மார்க்ஷிஸ லெனிஸவாதிகள், தொழிலாளவர்க்க புரட்சிவாதிகள். அவர்கள் வாழ்கின்ற நாடுகளில் புரட்சியின் வளர்ச்சி எந்த நிலையிலும் இருக்கலாம். ஆனால் இறுதியில் உலகம் பூராவும் சோஷலிஸமும், கம்யூனிஸமும் வெற்றிபெறும் என்பதில் சகல நாடுகளில் வாழ்கின்ற கம்யூனிஸ்ட்டுகளும் நம்பிக்கை கொண்டவர்கள். அந்த நம்பிக்கை அவர்களுக்குப் பொதுவானது.

சோஷலிஸ்ட் நாடுகளை விடுத்து ஆசியா ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் வாழ்கின்ற மக்களின் மொத்த தொகை 100 கோடியாகும். இந்த பெரிய நிலப்பரப்பில், ஏகாதிபத்தியத்திற்கு, காலனி ஆதிக்கத்திற்கு, நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான தேசிய ஜனநாயகப் புரட்சி இயக்கம் நாள்தோறும் மலையென வளர்ந்து வருகிறது. இவ்வித நாடுகளில் அல்லது பகுதிகளில் புரட்சிகர நிலமை இப்பொழுது நிலவுகிறது அல்லது உருப்பெற்று வருகிறது. உலக புரட்சிகர போராட்டத்தில் இது முக்கிய பகுதியாகும். இப்பிரதேசங்களில், போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தினடித்தளத்தையே குலைத்துவிட்டது; மேலும் நிலைநிலை குலைத்துவருகிறது. தொழிலாளிவர்க்க புரட்சிவாதிகளும், கம்யூனிஸத்தில் நம்பிக்கை தொடர்ந்து நடைபெற்றுவந்த ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் இந்த உண்மையை மேலும்ஸ்திரப்படுத்துகின்றன. இந்த நாடுகளில் சிலவற்றில் மக்களுடைய ஆயுதம் தாங்கிய புரட்சிகரப் போராட்டங்கள் வெற்றிபெற்றுவிட்டன. மற்ற நாடுகளில் அவை மேலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சகல நாடுகளைச்சேர்ந்த கம்யூனிஸ்டுகளும் இந்த ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்கு ஆதரவளிக்கிறார்கள், ஒத்த உணர்வுகொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் ஆயுதம் தாங்கிய புரட்சிகர மக்கள் சகல கஷ்டங்களையும், தடைகளையும் வெற்றிகரமாகத் தாண்டி முடிவில் ஆயுதம் தாங்கிய தங்கள் எதிரிகளான பிற்போக்குவாதிகளை முறியடிப்பார்கள் என்பதிலும் கம்யூனிஸ்டுகள் தீர்க்கமான நம்பிக்கை கொண்டவர்கள். கொடுமையான அடக்குமுறையை மட்டுமல்லாது காலனி நாடுகளில் பல ஏமாற்றுவித்தைகளையும், தந்திரங்களையும் ஏகாதிபத்தியவாதிகள் கையாளுகின்றனர். இவ்விதத்தில் சில நாடுகளுக்கு பெயரளவில் சுதந்திரமும் வளங்குகின்றன. இன்று பெருமளவில் பழைய காலனி ஆதிக்கம் சீர்குலைந்துவருகிறது. அதற்குப் பதிலாக ஏகாதிபத்தியம், முக்கியமாக அமெரிக்க ஏகாதிபத்தியம் ராணுவ கூட்டணி மூல லாம் கம்யூனிஸ்டுகளின் தொழிலாள வர்க்கக் கட்சிகள் உண்டோ அங்கெல்லாம் இரண்டுவித புரட்சிகர கடமைகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவையாவன; முதலில் தேசிய ஜனநாயகப் புரட்சியும், இரண்டாவதாக சோஷ



லிஸ்ட் புரட்சியில் வெற்றியுமாகும். இதனைச் சாதிப்பதற்கு, தொழிலாளி வர்க்கம் எந்த நாடுகளில் உடனடியாக இருக்கின்றனவோ அங்கெல்லாம் தொழிலாளி வர்க்கத்திற்கான தனித்துவம்பெற்ற அரசியல் சக்தியை வளர்க்க வேண்டியதும், அந்த நாட்டு தலைமை தாங்க தொழிலாளி வர்க்கம் தயாரா, முதலாளி வர்க்கத்திற்கும் தனக்கும் இடையே உள்ள வேற்றுமையை சரியாக உணர்ந்திருக்கிறதா, தேசிய முதலாளிகளின் கட்சிகளுடைய பிழையான கொள்கைகளை, திட்டங்களை கண்டிப்பதுடன் தனது ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவக் கொள்கைகளை, திட்டங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று செயலாற்றத் தயாராக இருக்கிறதா என்பதாகும்.

### சிறந்த உதாரணம்

தேசிய ஜனநாகப் புரட்சியில் தேசிய முதலாளி வர்க்கம் தடுமாறுமல், பெருமளவிலாவது தடுமாறுமலிருப்பதற்குரிய ஒரே வழி தொழிலாளி வர்க்கக் கட்சி தடுமாற்றமின்றி இருப்பதின் மூலமாகவேயாகும். இவ்வழியில் இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி நல்ல உதாரணமாக விளங்குகின்றது. அக்கட்சி தனக்கும் முதலாளித்துவத்திற்குமிடையே உள்ள வேற்றுமைகளை நன்கு உணர்ந்துள்ளது, புரட்சியில் தலைமைக்காகப் போராடியுள்ளது. ஒரு பக்கத்தில் அக்கட்சி தேசிய முதலாளிகளோடும், சகல தேசாபிமானிகளின் சக்திகளோடும் பரந்த ஐக்கிய அணியை அமைத்துள்ளது. மறுபக்கத்தில் தேசிய சோஷலிஸம் என்ற முதலாளி தேசாபிமானிகளோடும் ஏற்படுகின்ற ஐக்கியமாகும்.

### விவசாயிகளோடு ஐக்கியம்

பொதுவாகப் பார்க்குமிடத்து, காலனி, காலனி சார்பு நாடுகளில் ஏற்படும் தேசிய ஜனநாயகப் புரட்சி உண்மையில் விவசாயிகளின் புரட்சியாகும். ஆதலால் ஜனத்தொகையில் பெரும்பான்மையாக விளங்கும் விவசாயிகளுடன், குறிப்பாக ஏழை விவசாயிகளுடன் ஒன்றுபட்டு, குறிப்பிடத்தக்க எதையும் அவர்கள் பெறுவதற்கு முன்னதாக, அசைக்கமுடியாத அளவில் புரட்சிக்கு வித்திடவேண்டும். விவசாயிகளிடமிருந்து தனிமைப்பட்டு, சத்திபெற்ற ஏகாதிபத்தியத்தையோ, அதனுடைய வால்பிடி நாய்களையோ தொழிலாளி வர்க்கத்தால் முறியடிக்கவும் முடியாது, தேசிய ஜனநாயகப் புரட்சிக்கு தலைமை தாங்கவும் முடியாது. தொழிலாளி வர்க்க புரட்சிவாதிகள், விவசாயிகள் மத்தியில் சென்று கடுமையாக நீண்டகாலம் அவர்கள் மத்தியில் உழைக்கவேண்டும். பிழையான வழியிற் சென்று கடுமையான நஷ்டமடைந்த பின்புதான் சீன கட்சியினுலும் இதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

கொண்டவர்களும் இந்நாட்டு புரட்சிகரப் போராட்டங்களில் சரியான பாதையைக் கடைப்பிடித்து, சகல மக்களையும் ஒன்று திரட்டினுல் தங்களுடைய தேசிய ஜனநாயகப் புரட்சியில் முழு வெற்றியைப் பெறமுடியும், புரட்சிகர மக்களின் ஆட்சியை ஏற்படுத்தமுடியும், சோஷலிஸத்திற்கு வழி அமைக்க முடியும். இந்த நாடுகளின் தேசிய ஜனநாயகப் புரட்சி இயக்கங்கள் பெறக்கூடிய வெற்றியும், முன்னேற்றமும் சோஷலிஸ்ட் நாடுகளுக்கும், முதலாளித்துவ நாடுகளில் வாழக்கூடிய தொழிலாளி வர்க்கத்திற்கும், உழைப்பாளி மக்களுக்கும் பெரும் உதவியாக விளங்குவதோடு, நல்ல சூழ்நிலைகளையும் ஏற்படுத்தும்.

### ஏகாதிபத்தியத்தின் புதிய முறை

சுதந்திரம் கேட்கக்கூடிய நாடுகளை ரத்தக்களரியாக்குவதற்காக ஏகாதிபத்தியம் தனது படைகளை அனுப்புகிறது அல்லது வால்பிடி நாய்களை உபயோகப்படுத்துகிறது. ஆகவே ஏகாதிபத்தியத்திற்கும் அதன் வால்பிடி நாய்களுக்கு எதிராகவும் புரட்சிகரப் போராட்டங்களை நடத்துவது அடிமைப்பட்டுள்ள நாடுகளுக்கு அவசியமாகிறது. இரண்டாவது உலகயுத்தத்தின் பின் ஆசிய. ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் மாகவும், தமது பொம்மைகள் மூலமாக ஆக்கிரமித்தும், ஐ. நா. சபை மூலமாக தலையிட்டும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் தனது அடக்குமுறையை, காலனி சுரண்டலை நடத்த முனைகிறது. ஏகாதிபத்தியத்தின் இக்கொள்கை நவீன காலனி ஆதிக்கம் என அழைக்கப்படும். தற்போதைய உலக அரசியலில் இது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் இன்னும் சுதந்திரம் அடையாத நாடுகளைத்தவிர, உண்மையான சுதந்திரம் பெறவேண்டிய கடமையைநிறைவேற்றவேண்டிய, பெயரளவில் சுதந்திரம் பெற்ற பல நாடுகளும் உண்டு. சுதந்திரம் பெற்று தேசிய முதலாளி வர்க்கத்தால் ஆளப்படும் நாடுகளில் பல விதத்தில் ஏகாதிபத்திய பொருளாதார, அரசியல் ஆதிக்கம் நிலவுகிறது. நேர்மையான நில சீரமைப்போ புரட்சிகர நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு வேலைகளோ இங்கு நடைபெறவில்லை. ஒரு சில நாடுகளிலேயே தேசிய ஜனநாயகப் போராட்டம் உறுதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### இருவித புரட்சியும், கடமையும்.

இந்தவிதமான நாடுகளில், அல்லது பகுதிகளில் எங்கெல் புரட்சிகளில், அந்த நாட்டு தொழிலாளி வர்க்கம் தலைமையைப் பெறுவதும் முதன்மையானதாகும்.

காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலுமுள்ள தேசிய முதலாளிகளின் இரண்டுவித குணங்களையும் நாம் உணரவேண்டும். ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்க்க விரும்புகின்ற தேசாபிமானம் கொண்ட தேசிய முதலாளிகளின் முற்போக்கு எண்ணங்களை அறிந்து அக்கடமையில் அவர்களோடு ஐக்கியப்படவேண்டும். ஆனல் அதே நேரத்தில் தேசிய ஜன

**N. சண்முகதாஸன்**

நாயகப் புரட்சியை முற்றுமுழுதாக நிறைவேற்றவும் வெற்றிபெறச் செய்யவும் தேசிய முதலாளிகள் தலைமை தாங்குவார்கள் என ஒருவர் எதிர்பார்ப்பது தவறு என்பதை பலசான்றுகள் நிரூபித்துவிட்டன. அதிலும் கூடுதலாக சோஷலிஸத்தை தேசிய முதலாளிகள் அமுல் படுத்துவார்கள் என ஒருவர் எதிர்பார்ப்பது முன்னையதிலும்அரியதாகும். புரட்சியை வெற்றிகரமாக, பூரணமாக நிறைவேற்ற முடியுமா என்பது பின்வருவனவற்றில் முக்கியமாகத் தங்யுள்ளது. அதாவது தேசிய ஜனநாயகப் புரட்சிக்குத் வர்க்கத்தின் கூப்பாட்டிலுள்ள உயர்ந்த மட்ட முதலாளித்துவ குணத்தைச் சிறப்பாக அம்பலப்படுத்தி வருகிறது. அத்தோடு சீன எதிர்ப்பு இயக்கம் உள்நாட்டு பிற்போக்குவாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட போது திடமாக அதை எதிர்த்து நின்று தனது சர்வ தேசிய உணர்வை எடுத்துக் காட்டியது.

### விவசாயிகளோடு ஐக்கியம் அவசியம்.

காலனி நாடுகளிலும், காலனி சார்பு நாடுகளிலும் ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும், ஏகாதிபத்திய நேசர்களாக விளங்கும் முதலாளிகளுக்கும் எதிராக தேசிய ஜனநாயகப் புரட்சியை நடத்துவதற்கு தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் பரந்த ஐக்கிய முன்னணி அமைக்கப்படுவது மிகவும் அவசியமாகும். அது நடைபெறக்கூடியதுமாகும். இந்த ஐக்கிய முன்னணியில் இரண்டு வித இணைப்பு உண்டு. அதில் தொழிலாளர்களின், விவசாயிகளின், புரட்சிகர எண்ணங்கொண்ட படித்தவர்களின் மற்றும் உழைப்பாளர்களின் ஐக்கியம் முதன்மையானதும், அடிப்படையானதுமாகும். மற்றது சுரண்டப்படுகிறவர்களுக்கும், ஏகாதிபத்தியத்தை எதிர்க்க விரும்புகின்ற முதலாளிமார்களோடும், ஏனைய

### தேசிய முதலாளிகளின் இரண்டு குணங்கள்

காலனி, காலனிசார்பு நாடுகளிலுள்ள முதலாளிவர்க்கத்தின் நிலை மிகவும் சிக்கலானதாகும். இவர்களில் ஒரு பகுதி ஏகாதிபத்திய நேசர்களாக விளங்குவர். புரட்சியில் இவர்களும் தாக்குதலுக்குரிய இலக்காக விளங்குவர்.

விடுதலைக்கு முற்பட்ட சீனத்தில் முதலாளி வர்க்கத்திற்குள் இருந்த இப் பகுதியினர் கம்புரடா முதலாளிகள் என அழைக்கப்பட்டனர். முதலாளிவர்க்கத்தின் அடுத்த பிரிவினர் ஏகாதிபத்திய எதிர்ப்பு எண்ணம் கொண்டவர்கள், அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் நடுநிலை வகிக்கக்கூடியவர்கள். புரட்சியில் இவர்கள் கூட்டாளிகளாவர். சீனவில் இவர்கள் தேசிய முதலாளிகள் எனப்படுவர். பொதுவாக நடுத்தர முதலாளிகளும், உயர்ந்த சிறு முதலாளிகளும், அவர்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகளும் இப்பகுதியில் இடம் பெறுவர்.

சீனுவின் அனுபவத்திற்கேற்ப, இவ்விரு பகுதிக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை நன்கு உணர்வது அவசியமாகும். அவ்விதமின்றி இருவரோடும் ஒன்று சேருவதோ அல்லது இருவரையும் எதிர்ப்பதோ புரட்சிக்குத் தோல்வியை ஏற்படுத்தும்.

# தொழிலாளர் போராட்டங்களுக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி உறுதியான தலைமையளிக்க வேண்டும்

### இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனப் பொதுச்செயலாளர் பேச்சு

''தேசிய நிலைமையும் தொழிலாளி வர்க்கத்தின் பணியும்'' என்ற பொருள் பற்றி இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் என். சண்முகதாசன், மொறட்டுவ நகரமண்டபத்தில் பேசும்போது, ''தேசிய ரீதியாகவும் சர்வதேசிய ரீதியாகவும் முற்போக்கு சக்திகள் பல நல்ல வெற்றிகளைக் கண்டுள்ளார்கள்; இன்னும் பல வெற்றிகள் அண்மையில் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன'' என்று கூறினார்.

''சர்வ தேசிய ரீதியில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடு நாடுகளில் பரவியுள்ள தேசிய விடுதலைத் தீ, உலக ஏகாதிபத்தியத்திற்கு மாபெரும் தோல்விகளை ஏற்படுத்தியுள்ளது. சோஷலிஸ முகாமின் அணியில் திரண்டுள்ள முற்போக்கு சக்திகள், உலக சமாதானம், ஜனநாயகம், தேசிய விடுதலை ஆகியவற்றின் சக்திகளை உலகத்தில் பலம்பொருந்திய சக்திகளாக மாற்றியுள்ளது: மனிதசமுதாயத்தின் வருங்காலத்தை ஏகாதிபத்தியத்தினால் தீர்க்கமாக நிர்ணயிக்கமுடியாது. பிரித்தானிய, பிரஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் சுயஸ் பிரச்சனையில் கண்ட தோல்வியும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கியூபாவைத் தோற்கடிக்க முடியாமற் போனதும் இவர்களின் பலவீனத்திற்கோர் எடுத்துக்காட்டு.

ஆனால் அணு ஆயுதங்களைக் கொண்ட உலக ஏசாதிபத்தியம் இன்னும் உலக மக்களுக்கு பெரும் தீங்குகளை விழைவிக்கக் கூடிய சக்தியாக உள்ளது. சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் விரும்பும் சக்திகள் ஏகாதிபத்தியவாதிகளினால் ஏற்படக்கூடிய, மற்றுமொரு உலக யுத்தத்தைத் தடுத்து நிறுத்தக்கூடிய நிலையில் இருந்தாலும் கூட, ஏகாதிபத்தியவாதிகள் காலனிகளுக்கு எதிரான பல அடக்குமுறைகளில் ஈடுபட்டுள்ளார்கள். அங்கொலா, தென்வியட்நாம் லாவோஸ், புறூணி போன்ற நாட்டு மக்கள் இன்றும் இவர்களின் தலையீடுகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடவேண்டியுள்ளது. இதனால்தான் ஏகாதிபத்தியத்தை பூரணமாக ஒழித்துக் கட்டும் வரை ''யுத்தமே இல்லாத உலகம்'' ''ஆயுதமற்ற உலகம்'' என்பதெல்லாம் ஒரு பகற் கனவாகும். நிரந்தரமான உலக சமாதானம் ஏற்படுவதற்கு ஏகாதிபத்தியம் பரிபூரணமாக ஒழிக்கப்பட வேண்டும். பல ஏகாதிபத்திய நாடுகளில் சோஷலிஸம் வெற்றிபெற வேண்டும்.

ஆதலால் முற்போக்கு எண்ணங்கொண்ட யாவரும், தேசியவிடுதலைப் போராட்டங்களையும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எல்லாப் போராட்டங்களையும் நன்கு ஆதரிப்பதன் மூலம் ஒவ்வொரு நாட்டிலும் ஏகாதிபத்தியத்தை முறியடித்து உலக ஏகாதிபத்தியத்தை இறுதியாக ஒழித்துக் கட்டவேண்டும்'' என்று தோழர் சண்முகதாசன் குறிப்பிட்டார்.

சோஷலிஸ முகாம், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஏகாதிபத்திய விரோத தேசிய விடுதலை இயக்கங்கள், முதலாளித்துவ நாடுகளிலுள்ள புரட்சிகர எண்ணங்கொண்ட மக்கள், சமாதானத்தை விரும்பும் நடுநிலைமை நாடுகளின் அரசாங்கங்கள், சமூகத்தில் யுத்தத்தையும் அணு ஆயுத யுத்தத்தின் விளைகளையும் உணர்ந்து வெறுக்கின்ற மக்கள் கூட்டம் ஆகியவையே உலக சமாதானத்திற்கான சக்திகள் என்று தோழர் சண்முகதாசன் விளக்கம் கூறினார்.

தேசிய நிலையைப் பற்றி ஆராயும்போது முற்போக்கு சக்திகள் வெற்றிப் பாதையில் முன்னேறிச் செல்கின்றன என தோழர் சண்முகதாசன் மேலும் குறிப்பிட்டார். சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊசலாட்டத்தின் காரணமாகவும், ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத கொள்கைகளை திறமையுடன் அமுல் நடத்தத் தவறியதாலும், இந்த நிலையைச் சாதகமாக்க யு.என்.பி. எடுத்துவரும் முயற்சிகளாலும், தடுமாறி இருந்த மக்களுக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி, இந்த நாட்டின் அரசியல் வாழ்க்கையில் ஓர் புதுப்பாதையைக் காட்டுகிறது. அண்மையில் நடைபெற்ற மிக முக்கிய சம்பவம் இதுவே. இது இந்த நாட்டின் முற்போக்கு சக்திகள் பலநாள் கண்ட கனவு நனவாகும் நிகழ்ச்சியாகும். இடதுசாரி இயக்கத்திற்கும், தொழிலாளி வர்க்கத்திற்கும் இது புத்துயிர் அளித்துள்ளது. இடதுசாரி ஐக்கிய முன்னணியைப் பாதுகாத்து ஒன்று திரட்டி மேலும் வளர்ப்பது முற்போக்கு எண்ணமுள்ளஒவ்வொருவரதும்கடமையாகும். அதே நேரத்தில் ஐக்கிய முன்னணி தனது பாதையில் உள்ள சில பகுதிகளிலிருந்து விலகிச்செல்ல வேண்டும். பாராளுமன்ற முறைகளினால் மட்டும் ஆட்சியைக் கைப்பற்ற இவர்கள் முயலக்கூடாது. இப்படி நடந்தால் பிரித்தானிய தொழிற் கட்சிக்கு நேர்ந்த கதி எமக்கும் நேரக்கூடும். பாராளுமன்றத்தை நாம் பூரணமாகப் பாவித்து அதிகப்படியான ஆசனங்களைப் பெறுவதில் நாம் எம்மாலானது செய்யவேண்டும்.

ஆனால் இருவிஷயங்களை நாம் தெளிவாக மனதிற் கொள்ளல் வேண்டும். உலச சரித்திரத்தில் இதுவரை சமாதானமாக, பாராளுமன்றம் மூலம் ஆட்சி பெறும் சந்தர்ப்பம் எமக்கு கிடைக்கவில்லை. எப்போதாவது தொழிலாளி வர்க்கம் சமாதானமாக ஆட்சியைக் கைப்பற்றபோகிறது என்று தெரிந்ததும் முதலாளி வர்க்கம் தனது ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டு வெளிப்படையான சர்வாதிகாரத்தையே பாவித்துள்ளது. இதற்கு சரித்திரத்தில் பல உதாரணங்களை நாம் காணலாம். ஆதலால் இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை கைப்பற்றுவதற்கு, சாத்வீகப் போராட்டங்களுக்கும் சாத்வீகமற்ற போராட்டங்களுக்கும் தயாராக இருக்க வேண்டும்.

(6-ம் பக்கம் பார்க்க)

---

தேசிய ஜனநாயகப் புரட்சியில் தேசிய முதலாளிகளுக்கு இரண்டுவித குணங்கள் இருப்பதினால், தொழிலாளி வர்க்கம் அவர்களோடு இணைவதும், எதிர்ப்பதுமாகிய இரண்டுவிதமான கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

தேசிய முதலாளிகள் அதிகாரத்திற்கு வந்த பின்பு, உள்நாட்டில் வர்க்கப் போராட்டம் கூர்மை பெறுவதினாலும், வெளியில், ஏகாதிபத்தியத்தின் நெருக்குதலினாலும் பொதுவாக தேசிய முதலாளிகளின் உள்நாட்டுக் கொள்கை மேன்மேலும் பிற்போக்குத் தன்மை பெற்றதாகமாறுவதோடு, சாதாரணமாக கம்யூனிஸ்ட்டுகளுக்கும், மக்களுக்கும் எதிராக அவர்கள் திரும்புவர். அவர்களுடைய வெளிநாட்டுக்கொள்கையும் இரண்டு விதமானதாகும். ஒரு புறம் சோஷலிஸ நாடுகளுடன் சமாதானமாக ஒத்துழைப்பார்கள். மறுபுறம் ஏகாதிபத்தியத்தை நம்பியவர்களாய் அவர்களோடு சமாதானம் செய்துகொள்பவர்களாய் விளங்குவார்கள். இந்த இரண்டு அம்சத்தில் எது முக்கியமானதென்பது நிலவுகின்ற நிலையைப் பொறுத்தது.

### தேசிய முதலாளிகளின் ஆட்சியும் சோஷலிஸ்ட் நாடுகளும்

தேசிய முதலாளிகள் ஆட்சியிலுள்ள நாடுகளுடன் சோஷலிஸ்ட் நாடுகள் கொள்ளும் தொடர்பு நிலவுகின்ற நிலைக்கு ஏற்றமுறையில் ஐக்கியப் படுவதும் போராடுவதுமாகிய இரண்டு கொள்கையைக் கொண்டதாக இருக்கவேண்டும். அதாவது உலக சமாதானத்திற்கான, ஏகாதிபத்திய எதிர்ப்பு போன்ற இவர்களின் தன்மைகளை ஆதரிக்கவேண்டும். அவர்களின் ஏகாதிபத்தியத்திற்கு வால்பிடிக்கின்ற, சோஷலிஸ நாடுகளை எதிர்க்கின்ற பிற்போக்குக் கொள்கைகளை எதிர்த்துப் போராடவேண்டும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சீனாவிற்கும் ஏனைய தேசிய முதலாளித்துவ ஆட்சி நாடுகளுக்குமிடையில் உள்ள தொடர்புகளில் இதேவிதமான மாக்ஸிய லெனினிஸ வழியைக் கடைப்பிடித்துள்ளது.

தேசிய முதலாளிகள் ஆட்சியிலுள்ள நாடுகளுடன் சோஷலிஸ்ட் நாடுகள் சரியாக, முன்யோசனையுடன் நடந்துகொள்ளவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அவர்கள் நடத்துகின்ற போராட்டம் ஆதரிக்கப்படவேண்டும், அவர்களுடைய கைத்தொழில் உற்பத்தியைப் பெருக்க உதவிசெய்யவேண்டும், சமர்தான சகஜீவனக் கொள்கையின் அடிப்படையில் சினேகபூர்வமான உறவை வளர்க்கவேண்டும். இத்தனையும் அந்தநாட்டு மக்களுடைய நன்மைக்காகச் செய்யப்படவேண்டியதாகும். எப்படியிருப்பினும், இந்த நாடுகளில் சமூக முரண்பாடுகள் வளர்ந்து கூர்மைபெறும்பொழுது பிற்போக்குவாதிகளுடனும், ஏகாதிபத்தியத்துடனும் சமரசம் செய்துகொள்ள தேசிய முதலாளிகள் அதிகமாக நாடுவர். இது வர்க்க போராட்டத்தின் நியதி. சோஷலிஸ்ட் நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை இதை மாற்றிவிடும் என்பதை ஏற்கமுடியாது. உண்மையாகப் பார்த்தால், அந்த நாட்டு அரசியல் மாற்றங்கள் அந்த நாடுகளில் நடைபெறக்கூடிய வர்க்கபோராட்டத்தினாலேயே நிர்ணயிக்கக்கூடியதாகும்.

### தொழிலாளர்களின் தலைமை

அடிப்படையில், தேசிய ஜனநாயகப் புரட்சியில் தொழிலாளர்களின் தலைமைதான் மிக முக்கியமான கேள்வியாகும். 1905ம் ஆண்டு லெனின் ''ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயவாதிகளின் இரண்டு தந்திரங்கள்'' என்ற நூலை எழுதினார். சீனப் புரட்சிக்கு வழிகாட்டுவதில் இந்த நூல் மிக முக்கிய கடமையை ஆற்றியது. லெனினைப் பொறுத்தவரையில் ஜனநாயகப் புரட்சிசோஷலிஸ்ட் புரட்சியிலிருந்து மாறுபட்டதாகும். அவை இரண்டு விதமான புரட்சிகளாகும். இருப்பினும் அவை இரண்டிற்கும் சம்பந்தமுண்டு. ஜனநாயகப் புரட்சியின்போது சோஷலிஸ்ட் புரட்சிக்குரிய கடமைகளை நிறைவேற்ற ஒருவர் முனையக்கூடாது. இருப்பினும் ஜனநாயகப் புரட்சியின்போது சோஷலிஸ்ட் புரட்சிக்குவேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயகப் புரட்சி வெற்றிகரமாக முடிந்தவுடன் எவ்வித தடையுமின்றி சோஷலிஸ்ட் புரட்சியை கட்டவிழ்த்து விட முடியும். தேசிய ஜனநாயகப் புரட்சி நடக்கின்ற நாடுகளிலெல்லாம் அந்த நாட்டு நிலைமைக்கேற்ப லெனின் இப்புத்தகத்தில் கூறிய கொள்கைகளைக் கடைப்பிடிப்பது அந்தந்த நாட்டு கம்யூனிஸ்டுகளின் கடமையாகும்.

### முரண்பாடுகள் வளர்கின்றது

ஏகாதிபத்திய உலகத்தில் முரண்பாடுகள் கூர்மையாக வளர்கின்றன. அதேபோல் அடிமைப்பட்டுள்ள நாடுகளில் தேசிய விடுதலைப்போராட்டங்கள் மலையென வளர்கின்றன. இந்த நிலையில் எந்த ஏகாதிபத்திய நாட்டிலாவது, அல்லது வளர்ந்துள்ள முதலாளித்துவ நாட்டிலாவது புரட்சிகர சூழ்நிலைகள் அல்லது புரட்சிகர கொந்தளிப்புகள்மேலும் தீவிரமாக வளரலாம். முதலாளித்துவ நாடுகளில் இயங்கக்கூடிய சகோதரத்துவக் கட்சிகள் உலக சமாதானத்திற்கான, பொருளாதார முன்னேற்றத்திற்கான, பாஜிஷ்ட் போக்கிற்கு எதிரான, ஜனநாயக சுதந்திரத்திற்கு, உரிமைக்கான போராட்டத்திற்கு தொழிலாள வர்க்கத்திற்கும் ஏனைய உழைப்பாளி மக்களுக்கும் தலைமையளிக்க பலவித கஷ்டங்களின் மத்தியில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்க ஏகபோக மூலதன ஆதிக்கத்திற்குள் இருக்கும் அந்நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் அதன் வால்பிடி நாய்களுக்கு எதிராகவும் போராடவேண்டிய கடமை சகோதரக் கட்சிகளை எதிர்நோக்கியுள்ளது. இந்தப் போராட்டங்கள் எவ்வளவு தீவிரமாக பரந்தளவில் நடைபெறுகிறதோ, அவ்வளவுக்கு சர்வதேசிய ஏகபோக மூலதனத்தின் ஆதிக்கம் குறைக்கப்படும், யுத்த முஸ்தீப்புச்செய்யும் ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தும்.

இந்தவிதமான போராட்டங்களில் கம்யூனிஸ்ட்டுகள் பரந்தளவு ஐக்கிய முன்னணி அமைத்து ஒருசில பிரச்சனைகளுக்காயினும் ஒன்றுபடக்கூடியவர்களுடன் ஒன்றுபட்டு பாராளுமன்றம் போன்ற ஏனைய சட்ட ரீதியான வழிகள் உட்பட சகலவிதமான வழிகளிலும் போராடவேண்டும். அவ்விதம் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் நடத்தப்பட்டு, போராட்டங்கள் வெற்றிபெறுமேபானால் தொழிலாளர்களின் அரசியல் சக்தியை ஸ்திரப்படுத்தும். இந்தப் போராட்டங்கள் மாத்திரம் ஏகாதிபத்தியத்தை கவிழ்ப்பதற்காக நடத்தப்படும் போராட்டங்கள் அல்ல. அவ்விதம் அவர்கள் போராடிக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், இப்போராட்டங்களை எல்லைப்படுத்தக்கூடிய முதலாளித்துவ தூண்டுதல்கள், குறிப்பாக வலதுசாரி சமூக ஜனநாயக வாதிகளின் எண்ணங்கள் பரவவிடாமல் எதிர்த்துத் தடுத்துவிடவேண்டும். பதிலாக இவ்வித போராட்டங்களின்போது தமது வர்க்கத்தை, நசுக்கப்படுபவர்களை, சுரண்டப்படுபவர்களை புரட்சிகர உணர்ச்சிப் பாதையில் தூண்டிவிடவேண்டும்.

சாதாரண நேரங்களில் மார்க்ஷிய லெனினிஸ கட்சி தன்னை ஓர் புரட்சிகர கட்சியாக்கி, சோஷலிஸ புரட்சி பற்றிய இட்டத்தை மக்களுக்குப் போதித்து, வழிகாட்டி, புரட்சிகர சக்தியொன்றைக் கட்டி வளர்த்து, தத்துவார்த்த ரீதியாக, அரசியல் ரீதியாக, இயக்க ரீதியாக மக்களை புரட்சிக்கு தயார் செய்வதில் கடுமையாக உழைக்கவேண்டும். அப்பொழுதுதான் புரட்சிகர சூழ்நிலை ஏற்படும்பொழுது கடுமையான போராட்டம் நடத்துவதற்கு மக்களுக்கு சரியான தலைமையளிக்கவும், புரட்சியின் எதிரிகளான ஏகபோக முதலாளிகளை, ஏனைய பிற்போக்குவாதிகளை தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தால், புரட்சிகர மக்களால் அகற்றமுடியும்.

# வடபகுதியில்

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனப் பொதுச்செயலாளர் தோழர் என். சண்முகதாசன் கடந்தமாதம் 28ம் திகதிமுதல் இம்மாதம் 1ம் திகதிவரை யாழ்ப்பாண பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தார். இச்சுற்றுப் பிரயாணத்தின்போது பல தொழிலாளர்களையும், வாலிபர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிலிருந்து இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் வேகமாக யாழ்ப்பாண பகுதியில் வளர்ந்துவருகிறது என்பது தெரியவந்தது.

யாழ்ப்பாணத்திற்கு அவர் விஜயம் செய்த முதல் நாள் காலையில் அங்குள்ள தனிப்பட்ட மருத்துவ மனைகளில் வேலைசெய்கின்ற தொழிலாளர்களைச் சந்தித்தார். அவர்களுடன் மானிப்பாய்,மூளாய், இணுவில் போன்ற பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மருத்துவமனை நிர்வாகிகளுடன் அங்கு வேலை செய்கின்ற தொழிலாளர்களின் குறைகளைப்பற்றி விவாதித்தார். அன்று நண்பகல் அத்தொழிலாளர்களால் தோழர் சண்முகதாசனுக்கு விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

ஞல் தொழிலாளர்கள் பாராபட்சமான முறையில் நடத்தப்படுவதாகவும், மிகவும் கேவலமான, கஷ்டமான நிலையில் வேலை செய்யவேண்டியிருப்பதாகவும் தெரிந்துகொண்ட தோழர் சண்முகதாசன் அது பற்றி இ.போ.ச. உயர்தர அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்தார்.

பின்பு அவர்கள் மத்தியில் பேசுகையில் தோழர் சண்முகதாசன் கடந்த இ.போ.ச. தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் முக்கியத்துவத்

### பருத்தித்துறையில் வரவேற்பு

அவருடைய சுற்றுப் பிரயாணத்தின் மூன்றும் நாள் தோழர் சண்முகதாசன் அவர்களும், அவருடைய பாரியாரும் பருத்தித்துறைப் பகுதிக்கு விஜயம் செய்தனர். அங்கு பல இடங்களில் அவர்களுக்கு மிக உற்சாகமான வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

வதிரிப்பகுதி வாலிபர்களால் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்ட தோழர் சண்முகதாசன் எமது நாட்டில் இன்று நிலவுகின்ற அரசியல் நிலை பற்றியும், உருவாகிவரும் இடதுசாரி ஐக்கிய முன்னணி பற்றியும் குறிப்பிட்டு நாட்டிலே பொருளாதார நெருக்கடி கூடுகிறதெனவும், வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் உயர்வதினல் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிருர்கள் எனவும் இந்நிலையை மாற்ற சகல மக்களும் ஒன்றுபட்டு போராட தயாராக வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# இ.தொ.ச. சம்மேளனத்தின்

### யாழ் நகரசபை தொழிலாளர்கள்

அன்று பிற்பகல் யாழ்ப்பாண நகரசபையின் கீழ் வேலை செய்கின்ற தொழிலாளர்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகள் பற்றிக் கலந்துரையாடினுர். அண்மையில் யாழ் நகர சபையிலிருந்து விலக்கப்பட்ட 12 தொழிலாளர்களையும் அப்பொழுது அவர் சந்தித்தார். அதன்பின் அத்தொழிலாளர்களின் சார்பாக யாழ் நகரசபை ஆணையாளரை (கமிஷனர்) சந்தித்து அத்தொழிலாளர்களுடைய குறைகளைப் பற்றியும், விலக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டும் எனவும் விவாதித்தார். அத்தோடு இது சம்பந்தமாக யாழ் நகரசபை மேயரையும் தோழர் சண்முகதாசன் சந்தித்து விவாதித்தார்.

தைப் பற்றியும், இ.போ.ச. விலுள்ள பிற்போக்கு நிர்வாகக் கும்பல் பற்றியும் நீண்ட விளக்கமொன்றை அளித்தார். தொடர்ந்து பேசுகையில் இ.போ.ச. தொழிலாளர்களின் கடந்த போராட்டம் தொழிலாளர் மத்தியில் நல்ல ஐக்கியத்தை உருவாக்கியுள்ளதென்றும் தென் பகுதியில் வாழ்கின்ற தொழிலாளர்களுடன் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தொழிலாளர்களும் ஒன்றுபட்டு போராட தயாராக இருக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார். தோழர் சண்முகதாசன் தமது உரையில் ''தொழிலாளர் ஐக்கிய போராட்டத்தை நடத்துவதின் மூலம்தான் தமது உரிமைகளைப் பெறமுடியும்'' எனவும் குறிப்பிட்டார்.

தோழர் சண்முகதாசன் அவர்களுக்கு நெல்லியடி கம்யூனிஸ்ட் வாலிப சங்கத்தினராலும் வரவேற்பு விருந்துபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது. அப்பொழுது அவ்வாலிப சங்க அங்கத்தினருடன் அவர் நடத்திய கலந்துரையாடலில் தற்போதைய நிலையில் வாலிபர்களின் கடமை என்ன என்பதைப் பற்றி, நாட்டிலே, குறிப்பாக தொழிலாளர் மத்தியில் உருவாகிவரும் போராட்ட உணர்ச்சி பற்றியும் சிறந்த விளக்கமொன்றை அளித்தார்.

### கரவெட்டி கிழக்கில்

தோழர் சண்முகதாசன் அவர்களுக்கும் அவரது பாரியாருக்கும் வளர்மதி வாசிகசாலையில் அப்பகுதி வாலிபர்களினுல் மிகுந்த உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தோழர் தம்பிமுத்து அவர்களின் தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசிய தோழர் சண்முகதாசன், சமூகத்திலுள்ள கொடுமைகளை எதிர்த்துப்போராட கம்யூனிஸ்டுக்கள் என்றைக்கும் தயாராக இருக்கிருர்கள் என்றும், இன்று நிலவுகின்ற முதலாளித்துவ சமுதாய அமைப்பை மாற்றி தொழிலாளி வர்க்க ஆட்சியை ஏற்படுத்துவதன் மூலம் மாத்திரமே உண்மையில் சமூகக் கொடுமைகளை ஒழிக்க முடியும் என்றும் கூறினுர்.

மேலும் தோழர்கள் கரவைக் கந்தசாமி, செல்லதம்பி, ஆகியோரும் அவ்விருந்துபசாரத்தில் பேசினர்: தோழர் நாகராசா அவர்களினுல் காலம் சென்ற தோழர் பொன். கந்தையா அவர்களின் ஞாபகார்த்தமாக பாடல்கள் பாடப்பட்டன.

### பருத்தித்துறை டிப்போ

அன்று இரவு பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ தொழிலாளர்களைச் சந்தித்து தோழர் சண்முகதாசன் அவர்களின் குறைகளையும் கஷ்டங்களையும் தெரிந்துகொண்டார். அவர்கள் மத்தியில் பேசுகையில் தோழர் சண்முகதாசன் தொழிலாளர்கள் இனிமேல் தனித்துப் போராடாமல் ஒன்றுபட்டுப் போராடவேண்டும் என்றும் எதிர்காலத்தில் நடத்தவிருக்கும் தொழிலாளர்களின் ஐக்கிய போராட்டத்திற்கு இன, மொழி பாகுபாடின்றி சகல தொழிலாளர்களும் தயாராக இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### சொற்பொழிவு

தமது சுற்றுப்பிரயாணத்தின் மூன்றும் நாளில் தோழர் சண்முகதாசன் யாழ் கம்யூனிஸ்ட், மற்றும் முற்போக்கு வாலிப சங்கத்தினரால் யாழ் நகர மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட ஓர் பகிரங்கக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினுர். இக் கூட்டம் தோழர் இளங்கீரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ''தேசிய நிலையும் தொழிலாளர்'' கடமையும் என்னும் பொருள் பற்றிப் பேசிய தோழர் சண்முகதாசன் நீண்ட உரை ஒன்றை நிகழ்த்தினுர்.

# துரிதவளர்ச்சி

### யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போ

அன்று (28ம் திகதி) மாலையில் யாழ்ப்பாணம் கிழக்கிலுள்ள இ.போ.ச. டிப்போ தொழிலாளர்களைத் தோழர் சண்முகதாசன் சந்தித்தார். அப்பொழுது அந்த டிப்போவில் இருக்கின்ற நிர்வாகிகள் சிலரின் பிற்போக்குத் தன்மையையும், தொழிலாளர்களுக்கு அவர்கள் இழைக்கின்ற தவறுகளையும் தெரிந்துகொண்டார். அத்தோடு சில நிர்வாகிகளி

### சிமெந்து கார்பரேசன் தொழிலாளர்களுடன்

சுற்றுப்பிரயாணத்தின் இரண்டாம் நாள் தோழர் சண்முகதாசன் காங்கேசன்துறை சீமெந்து கார்பரேசனில் வேலை செய்கின்ற தொழிலாளர்களைச் சந்தித்து அவர்களின் குறைகள் பற்றியும், கோரிக்கை புற்றியும், சீமெந்து கார்பரேசனில் நடைபெறும் ஊதாரித்தனம் பற்றியும், ஊழல் மிக்க நிர்வாகத்தைப் பற்றியும் அத்தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

## தொழிலாளர் போராட் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் நாம் அதிக ஆசனங்களைப் பெறுவதற்குக்கூட, மக்களுடைய பூரண ஆதரவை நாம் பெற பெறவேண்டும். குறிப்பாக தொழிலாளி, விவசாயி வர்க்கங்களின் பூரண ஆதரவை நாம் பெறவேண்டும். எமது எதிரிகள், மக்களை ஏமாற்றி, வாக்குகளை விலைக்கு வாங்குவதில், பிரச்சாரக்கருவிகளில் எம்மைவிடமிகவும் சாதகமான வசதிகளைக் கொண்டிருக்கும் வேளையில், தொழிலாள விவசாய மக்களின் நாளாந்தப் பிரச்சனைகளில் அவர்களுடன் உறுதுணையாக நின்று, அவர்களின் பொருளாதாரப் போராட்டங்களுக்கு தலைமை தாங்குவதன் மூலம்தான் அவர்களின் ஆதரவை நாம் திரட்ட முடியும்.

உழைக்கும் மக்கள் யாவரும் இன்று பல நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளனர். நாளுக்கு நாள் உயர்ந்துபோகும் வாழ்க்கைச்செலவு ஒருபுறம், சம்பள உயர்வைத் தடுக்கும் கொள்கை மறுபுறம், இதனல் ஏற்படும் பொருளாதார நெருக்கடி, தொழிலாளி வர்க்கத்தினிடையே இனிமேல் பொறுக்க முடியாத நிலை. இதனல் அண்மையில் ஏற்படவிருக்கும் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு சலனமற்ற, உறுதிமிக்க, ஐக்கியமாக தலைமை தாங்கவேண்டியது இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கடமையாகும். இந்த வழிவகைகளினுல்தான், நாம் பாராளுமன்ற தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கமுடியும்.

இடதுசாரி ஐக்கியமுன்னணியைத் தொடர்ந்து, தொழிற்சங்க ஐக்கியம் அமைக்கப்பட வேண்டும். இந்த நாட்டில் சக்திமிக்க தொழிற்சங்க இயக்கம் உண்டு. 15 லட்சம் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் அணிதிரண்டுள்ளனர். இத்தொழிலாளர்களும், அவர்களின் குடும்பத்தினரும் சேர்ந்து இந்தநாட்டு மக்களில் ஐம்பது விகிதத்தினராவர். எமது ஐக்கியமின்மைதான் எங்கள் குறைபாடாக இருந்துள்ளது. தொழிற்சங்க இயக்கத்தை நாம் ஐக்கியப்படுத்தினுல், வேறெந்த சக்தியும் எம்மை எதிர்த்துநிற்கமுடியாது. குறிப்பாக ஐக்கிய முன்னணி ஏற்பட்டதன் காரணமாகவும், தொழிற்சங்க ஐக்கியத்திற்கு நல்லதோர் அத்திவாரம் நாட்டப்பட்டுள்ளது.

இந்த ஐக்கியத்தை கதிரைப் பேச்சுகளால் மட்டும் ஏற்படுத்தமுடியாது. பொதுக்கொள்கைகளுக்கான புரட்சிகரமான போராட்டங்களின் மூலமாகதான் இதை ஏற்படுத்த முடியும். ஆதலால்தான் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் எல்லாத் தொழிற்சங்க மத்திய ஸ்தாபனங்களையும் ஒன்றுதிரட்டி, பொதுவான கோரிக்கைகளை முன்வைத்து பொதுவான போராட்டங்களை நடத்துவதற்கு முதல் முயற்சிகளை எடுத்துள்ளது. விதேசிய ஏகாதிபத்தியத்திற்கும், உள்நாட்டு முதலாளி வர்க்கத்திற்கும் எதிரான தீவிரப்போராட்ட கால கட்டத்தை நாம் அடைந்துள்ளோம் என்று தோழர் சண்முகதாசன் குறிப்பிட்டார். இந்தப் போராட்டங்களுக்கு துணிகரமான தலைமைதாங்கி நாட்டை முன்னெடுத்துச் செல்லும் கடமை இடதுசாரிகளினதும், முற்போக்குவாதிகளினதும் கடமையாகும்.

சில பத்திரிகைகள், இடதுசாரி இயக்கத்தின் சரியான பாதை எதுஎன்ற கேள்வி எழுப்பப்பட்டதும், இவ் அபிப்பிராயங்கள், சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தில் சீனுவுக்கும், சோவியத் யூனியனுக்கும் ஏற்பட்டுள்ள வேற்றுமைகளின் பிரதிபலிப்பு என்று விளக்கம் கூற முனைகின்றன. ஆனுல் இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இதில் கூறப்பட்டுள்ள அபிப்பிராயபேதங்கள் எமது புரட்சிகர இயக்கங்களில் நம்பிக்கை உள்ளவர்கட்கும் புரட்சிகரமற்ற மனப்பான்மைஉள்ளவர்கட்குமிடையேயுள்ள வேற்றுமைகள் என்பதுதான் உண்மை என்று தோழர் சண்முகதாசன் கூறி முடித்தார்.

## தொழிலாளி

மாதப் பத்திரிகையாக வெளிவந்த 'தொழிலாளி' இம்மாதம் முதல், மாதம் இருமுறை வெளிவருகிறது.

சிறந்த அரசியல் கட்டுரைகளையும், தொழிற்சங்க செய்திகளையும் நீங்கள் வாசிக்க விரும்பினுல் தவருது ''தொழிலாளி'' யை வாசியுங்கள்.

வெளியூர்களில் ''தொழிலாளி'' பத்திரிகை விற்பனை செய்யவிரும்புவோர் கீழ்க் காணும் விலாசத்திற்கு உடனே விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி, ''தொழிலாளி'',
123, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

★ தோழர் சண்முகதாசனின் யாழ்ப்பாண விஜயம் ★

# விலாத்தக்கொடை வேலைநிறுத்தம் வெற்றி

## தோட்டத்துறையின் பிடிவாதம் முறியடிக்கப்பட்டது

ரொசிட்டா குருப் விலாத்தங்கொட தோட்டத்தில் இ.தோ.தொ.ச. [செங்கொடி] அங்கத்தவர்கள் 392 பேர் இருக்கின்றார்கள். இவ்வருடம் ஏப்ரல் மாதம் 24ந் திகதி அட்டன் தொழில் கந்தோர் மூலமாக இவ் வாக்கெடுப்பு நடைபெற்றது. விலாத்தங் கொடை டிவிசனில் இ.தோ.தொ.ச. தில் அங்கத்தவர்கள் சேர்ந்து விட்டார்கள் என்று தெரிந்ததும் தோட்டத்துரை 'பிபியும்' கண்டக்டர் 'சலினும்' சேர்ந்து இ.தோ.தொ, சங்கத்தை பிளவுபடுத்த பல அட்டகாசங்களையும் மிருகத்தனமான முறையிலும் தொழிலாரைக் கஷ்டப்படுத்தி வந்தார்கள். ஆனால் அவர்கள் எவ்வளவு முயன்றும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தை (செங்கொடி) சங்கத்தைப் பிளவு படுத்த முடியவில்லை. இதற்கிடையில் 13-5-63ல் 4ம் நம்பரில் கவாத்து வெட்டத் தொடங்கினார்கள். இக் கவாத்தில் 40 தொழிலாளர்கள் பங்கு பற்றினார்கள். தோட்டத்துரை நபருக்கு 160 மரம் கவாத்து வெட்டும்படி கணக்குக்கொடுத்தார். ஆனால் தொழிலாளர்கள் 4.30 மணிவரை வேலை செய்தும் 100 மரத்துக்கு மேல் அவர்களால் வெட்ட முடியவில்லை, ஆகவே அவர்களுக்கு அரைப் பெயர் கொடுக்கப்பட்டது. 28-6-63ல் கவாத்து தொழிலாளிகள் அனைவரும் துரையிடம் கவாத்து வேலையில் உள்ள கஷ்டத்தை விபரமாக எடுத்துக் கூறினார்கள். ஆனால் தோட்டத்துரை தொழிலாளர்கள் கூறிய விபரங்களுக்கு செவி சாய்க்கவில்லை. (விலாத்தங் கொடை டிவிசனில் தற்போது செய்யும் கவாத்தை 20 வருடங்களுக்கு முன் செய்யப்பட்டதாக கவாத்து தொழிலாளிகள் கூறினார்கள்)

29. 5. 63ல் தொழில் கந்தோர் மூலமாக ஆப்பிசர் திரு. ஜயதேவனும், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக சுந்தரமும் கவாத்து வெட்டும் இடத்துக்குச் சென்று தொழிலாளரின் வேலையைப் பார்த்து, ஏன் அவர்களால் 160 மரம் வெட்டமுடியவில்லை என்ற விபரங்களை நேரில் கண்டறிந்து, துரைக்கு அவற்றை அறிவித்தும், துரை அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கைத் தோட்டத் தொழிலார் சங்கத்தின் பிரதிநிதியாகச் சென்ற தோழர் சுந்தரம் துரையுடன் கடுமையாக வாதாடினார்.

அதாவது துரையினால் முடியுமானால் அடுத்த டிவிசனில் உள்ள கவாத்துவெட்டும் தொழிலாளர்களை விலாத்தங்கொடை டிவிசனில் வேலைக்கு அமர்த்தி அத் தொழிலாளர்கள் 160 மரம் கவாத்தி வெட்டினால், தாங்களும் 160 மரம் வெட்டிக் கொடுத்து நஷ்டமடைந்த கணக்கையும் செய்துகொடுப்பதாகக் கூறினர். ஆனால் அதற்குத் தோட்டத்துரை உடன்படவில்லை.

ஜூன் மாதம் 7ம் திகதி கவாத்து வெட்டும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். 7 நாட்களுக்கு 14.6.63-15.6.63லும் சங்கத்தின்வேண்டுகோளுக்கு இணங்கி சில்லரை வேலைகள் கவாத்து வெட்டும் தொழிலாருக்குக் கொடுக்கப் பட்டது. 17. 6. 63-ல் கவாத்து வேலை செய்யும் தொழிலாளர்களை கவாத்து வேலைக்குப் போகும்படியும், 160 மரம் வெட்டும்படியும் கூறியதால் 17-6-63 அன்று ஆண், பெண் அனைவரும் தொடர்ந்து கலாத்துப் பிரச்சினை முடியும்வரை வேலை நிறுத்தம் செய்வோம் என்று ஒற்றுமையுடன் வேலை நிறுத்தம் செய்தார்கள். 30-6-63வரை வேலை நிறுத்தம் நீடித்தது. இதற்கிடையில் தொழிற்கமிஷனருக்கும் சங்கத்திற்குமிடையில் பேச்சுவார்த்தை நடத்தி, கடைசியில் தோட்டத்துரை 5-7-63ல் அட்டன் தொழிற்கந்தோருடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புகொண்டதற்கிணங்க இ.தோ.தொ. சங்கம் 1-7-63ல் கவாத்துத் தொழிலாளர்களைத்தவுர ஏனைய தொழிலாளிகளை வேலைக்குச் செல்லுமாறு வேண்டிக்கொண்டது. 1-7-63ல் கொழுந்து எடுக்கச் சென்ற பெண் தொழிலாளிகள் பகல் 12 மணிக்கு இருத்தல் குறைவென்று வீட்டுக்கு விரட்டப்பட்டார்கள். இதேபோல் தொடர்ந்து விலாத்தங்கொடை தோட்டக் கண்டக்டர் மிருகத் தன்மையான முறையில் நடந்து வந்தார்.


5.7.63ல் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்க பொதுக் காரியதரிசி தோழர். சண்முகதாசன் உட்பட ஜில்லா பிரதிநிதி தோழர் சக்திவேல், தலவாக் கொல்லை ஜில்லாப் பிரதிநிதி தோழர் ரொசாரியோ பர்னாந்தோ, ஆகியோர்களுடன் தோட்டத் துரை, C.R.O. அட்டன், தொழில் கமிஷனர் ஆகியோரின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடாத்தி கவாத்திலுள்ள கஷ்டங்களை எடுத்துக்கூறி, தொழிலாளர்கள் 120 மரத்துக்கு குறையாமல் கவாத்து வெட்டிக்கொடுப்பார்கள் என்ற முடிவுடன், கவாத்து தொழிலாளர்களை 8-7-63 முதல் கவாத்து வேலைக்கு போகும்படி இ.தோ.தொ. சங்கம் கேட்டுக் கொண்டது. அதே போல் கவாத்துத் தொழிலாளர்கள் 8-7-63ல் வேலைக்கு சென்றுவிட்டார்கள்.

---

## செங்கொடிச் சங்கத்திற்கு புதிய காரியாலயம்

### தலவாக்கல்லையில் நடைபெற்ற திறப்பு விழா!

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் நாளுக்கு நாள் வளர்கிறது. அதன் சக்தியும் செயலும் விரிவடைகிறது. இதனால் நாளுக்கு நாள் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் எங்கள் சங்கத்தில் அணிதிரண்ட வண்ணம் இருக்கின்றனர். எங்கள் சங்கத்தின் சீரிய சேவையும் சிறந்த பணியும் தான் வளர்ச்சிக்குக் காரணம் என்பதை மாற்றாரும் ஏற்றுக்கொள்வர்.



தலவாக்கல்லை மாவட்டப் பிரதிநிதி தோழர்

ரோசாரியோ பர்னாந்து

இதில் குறிப்பிடக்கூடிய வளர்ச்சியை தலவாக்கல்லை மாவட்டத்தில் எமது சங்கம் அடைந்துள்ளது. தினந்தோறும் அச்சங்கத்தில் தொழிலாளர்கள் சேர்ந்தவண்ணம் இருக்கின்றனர். இன்று தலவாக்கல்லைப் பகுதியிலேயே எமது சங்கம் தான் சக்திபெற்ற சங்கமாக விளங்கிறது.

கூடிய வேலைகளின் காரணமாக நல்லதோர் காரியாலயம் எமக்கு அப்பகுதியில் அவசியமாயிற்று. முன்பு எம் சங்கத்திற்கு இருந்த காரியாலயம் மிகவும் சிறியது. வசதிகள் குறைந்தது. வளர்ந்து வருகின்ற சங்க வேலைகளுக்கு அக்காரியாலயம் ஈடுசெய்யமுடியாமல் காணப்பட்டது. இதனால் எமது சங்கத்தின் தலவாக்கல்லை மாவட்டப்பிரதிநிதி தோழர் ரொசாரியோ பர்ணந்து அவர்களும் ஏனைய தோழர்களும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக புதிய இடம் ஒன்று எமது சங்கத்திற்கு கிடைத்துள்ளது. இப்புதிய காரியாலயம் பல வசதிகளுடன் அமைந்துள்ளது.

இப்புதிய காரியாலயம் கடந்த மார்ச் மாதம் 23ம் திகதி பெரும் ஆரவாரத்துடன் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்க தலைவர் தோழர் பி. நடேசன், எமது அப்புத்தளை மாவட்டப் பிரதிநிதி தோழர் எஸ். மாரியப்பா ஆகியோர் கலந்துகொண்டர்.

---

## புதிய தொழிலாளர்கள் எமது சம்மேளனத்தில் இணைந்தனர்

அண்மையில் எம்முடைய சம்மேளனத்தில் இணைந்துள்ள ஹோட்டல், பேக்கறி, குடிவகைத் தொழிலாளர் சங்கத்தில்கொழும்பிலுள்ள விம்டோ ஹவுஸ் தொழிலாளர்கள் சேர்ந்துள்ளனர். சகல தொழிலாளர்களும் எமது சங்கத்தில் சேர்ந்துவிட்டதை உணர்ந்த அக்கம்பெனி நிர்வாகம் உடனடியாக எமது சங்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

இதுதவிர முசாஜி அன் சன்ஸ் தொழிலாளர்களும் எமது பொதுத் தொழிலாளர் சங்கத்தில் இணைந்தனர். இவர்கள் பிளாஸ்டிக் வேலை செய்கின்றவர்கள். இவர்களுக்கு சரியான ஒரு சம்பள விகிதம் இன்றுவரை கிடையாது. இது சம்பந்தமாக விரைவில் எமது சங்கம் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

இந்த இரு ஸ்தாபனத்தொழிலாளர்களும் முன்பு சுதந்திரக் கட்சி தொழிற்சங்கத்திலிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## அரசாங்க அளவு பஞ்சப்படிக்காகப் போராட வாரீர்!

### தோட்டத் தொழிலாளர் சங்கங்களுக்கு இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் அழைப்பு

இலங்கையில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி கொடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கம் முன்வைத்துப்போராடி வருவது யாவரும் அறிந்ததே. இக்கோரிக்கையை வென்றெடுக்க சகல தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளடக்கிய ஐக்கிய போராட்டம் அவசியம். இதனால் இப்போராட்டத்தில் ஒன்றுபடும்படி சகல தோட்டத் தொழிலாளர் சங்கங்களையும் இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் அழைத்துள்ளது.


இந்த நாட்டின் முதுகெலும்பாக விளங்கக் கூடியவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். ஆனால் அவர்களின் வாழ்க்கை நிலை மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இந்த நாட்டிலுள்ள ஏனைய தொழிலாளர்களை விட மிகவும் குறைந்தாகும். அதுமட்டுமல்லாமல் அரசாங்க அளவு பஞ்சப்படி இந்த நாட்டிலுள்ள சகல தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. ஆனால் தோட்டத்தொழிலாளருக்கு மட்டும் இன்றுவரை இது வழங்கப்படவில்லை.

தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முதலில் முன்வைத்து, அதற்காகப் போராடியது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனமே. 1959ல் இக் கோரிக்கையை எமது சம்மேளனம் தொழிலாளருக்கு வென்றெடுத்தது. இன்று தேயிலை, றப்பர், தெங்கு ஏற்றுமதித் தொழிலாளர்களும், என்ஜினியரிங் தொழிலாளர்களும், இ.போ.ச. தொழிலாளர்களும் இக் கோரிக்கையை வென்றெடுத்துள்ளனர். சினிமாச்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் இக் கோரிக்கை வழங்கப்பட வேண்டும் எனக் கைத்தொழில் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இத்தனை பகுதி தொழிலாளர்களுக்கும் இக் கோரிக்கையை வென்றெடுத்த பெருமை இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தையே சாரும்.

இப்பொழுது இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் தோட்டத் தொழிலாளருக்கு இக்கோரிக்கையை வென்றெடுக்க கடந்த பல மாதங்களாக இயக்கம் நடத்திவருகிறது. இது சம்பந்தமாக கடந்த மார்ச் மாதத்தில் நுவரேலியாவில் விசேஷ மாநாடு ஒன்றையும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் நடத்தியது.

இக்கோரிக்கையைப் பற்றி மேலும் பரந்த இயக்கம் நடத்துவதுபற்றி சிந்தித்த எமது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயற்குழு, அரசாங்க அளவு பஞ்சப்படியை, குறைந்தது பல தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் பஞ்சப்படியான ரூபா 17/50 த்தானும் பெற்றெடுக்க முடிவு செய்துள்ளது. இதை வென்றெடுப்பதற்கு தோட்டத் தொழிலாளர்களின் ஐக்கியம் அவசியம் என்பதை உணர்ந்த செயற்குழு தோட்டத்தொழிலாளர்களின் மத்தியில் இயங்கிவரும் சகல சங்கங்களையும் இதுபற்றி பேச்சுவார்த்தைக்கு அழைப்பதெனவும் முடிவுசெய்துள்ளது.

இம்முடிவிற்கு ஏற்ப இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்களுக்கு இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஓர் கூட்டுப்பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைப்பு விடுத்துள்ளது. இவ்வழைப்பில் தங்களுக்கு வசதியான கால, நேரத்தை தெரிவிக்கும்படியும் அச் சங்கங்களை இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் வேண்டியுள்ளது.



கடந்த மார்ச் மாதத்தில் நடைபெற்ற இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் விசேஷ மாநாட்டிற்கு வந்திருந்தோரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காண்க.

# புதுமை வாழ்வளித்த புரட்சி

## கியூபா நாட்டு மக்களின் மகத்தான நாள் ஜூலை 26

( ஜூலை 26ம் திகதி கியூபாவில் புரட்சி தொடங்கிய ஞாபகார்த்த தினமாகும். கியூபா நாட்டுப் புரட்சியிலிருந்து இலங்கையில் வாழ்கின்ற நாம் அறிந்துகொள்ள வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. அத்தினத்தை முன்னிட்டு இக்கட்டுரையைப் பிரசுரிக்கிறோம் )

★ கரவைக் கந்தசாமி ★

கியூபா இன்று சுதந்திர நாடு. தாயகத்தின் பொருளாதார, அரசியல், கலாச்சார பிரச்சினைகளைப்பற்றி சிந்திக்க, தீர்வுகாண அந்த நாட்டு மக்கள், தொழிலாளி விவசாயிகள் உரிமை பெற்றுள்ளனர். இதற்கும் மேலாக கியூபா இன்று உலக சோஷலிஸ நாடுகளில் ஒன்று. உலகுவாழ் உழைப்பாளி மக்களின் விமோசனப் பாதையான மார்க்ஸிய லெனினிஸப் பாதையில் செல்கின்ற நாடுகளில் ஒன்று கியூபா.


உலக வரலாற்றின், இருபதாம் நூற்றூண்டின் நடுப்பகுதியில் எல்லா மக்களினதும் கவனத்தை ஈர்ந்தது கியூபா. எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாத வீராவேச சுதந்திர எழுச்சி கொண்டது அந்நாடு. தீரம்மிக்க போராட்டம் நடத்தித் தனது விடுதலையைப் பெற்றுக்கொண்டது அந்நாடு. அதற்கும் மேலாகத் லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே முதன் முதலில் ஏகாதிபத்திய காலனி ஆதிக்கத்திற்கு சாவுமணி அடித்து, சோஷலிஸ அரசு நிறுவும் பாதையில் செல்வதும் அந்நாடே.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக வீரம்மிக்க உண்மை ஒன்றையும் இந்த நாடு, இன்னும் வறுமையும், காலனி சுரண்டலும், நிலப்பிரபுத்துவ கொடுமையும், ஏகாதிபத்திய ஆதிக்கமும் நிலவுகின்ற ஆகிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளது. அதுதான் நாட்டுமக்கள் ஒன்றுபட்டால், தொழிலாளிகளும், விவசாயிகளும் ஐக்கியப் போராட்டம் நடத்திஞல் ஏகாதிபத்தியத்தை மட்டுமல்ல உள்நாட்டு பிற்போக்குவாதிகளையும் இலகுவில் தோற்கடிக்க முடியும் என்பதாகும்.

சில பெரிய மனிதர்களே, நாளுக்கு நாள் பலமிழந்து, தன் சவக்குழியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் ஏகாதிபத்தியத்தையும், அதன் ஆயுதங்களையும் கண்டு மிரளுகின்றனர். இந்த நேரத்தில் சின்னஞ்சிறிய கியூபா நாடு, அதிலும் உலக மக்களின் முழுமுதல் எதிரியாக. உலக சுரண்டல் ஏகாதிபத்தியத்தின் தலைவனுகத் திகழும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று போரிட்டு வெற்றிகொண்டது. ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற சில நாடுகளின் பிரமுகர்கள் அமெரிக்காவின் வாய் மிரட்டல்களுக்குப் பயந்து, நடுங்கி நிற்கையில், அதற்கு மிகவும் அருகிலே, அதிலும் தனது நாட்டிலேயே பலவந்தமாக ஓர் பகுதியை ஆக்கிரமித்து, படைத்தளத்தை வைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றிகொண்ட தென்ருல் அது எவராலும் மறுக்கமுடியாத வீரச்செயலன்றே.

### கியூபாவின் அடிமை நிலை.

கியூபா 19ம் நூற்றூண்டில் ஸ்பானிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமை நாடாக இருந்தது. அந்த நாட்டின் செல்வம், பொருள்வளங்கள் எல்லாம் ஸ்பானிய ஏகாதிபத்தி



1953ம் ஆண்டு ஜூலை 26ல் ஆரம்பிக்கப்பட்ட கியூபன் புரட்சி, நீண்டகால போராட்டத்திற்குப் பின் 1959 ஜனவரி 1ம் திகதி பிடல் காஸ்ரோவின் தலைமையில் வெற்றி பெற்றது. வெற்றிபெற்ற பிடல் காஸ்ரோவும், அவரது தோழர்களும் கவானவுக்கு வந்தபொழுது பெருத்த ஆரவாரத்துடன் அம்மக்கள் அவர்களை வரவேற்கும் காட்சியை மேலே காண்க. காஸ்ரோ நடுவில் காணப்படுகிருர்.

பத்திஞல் சுரண்டிச் செல்லப்பட்டது. அதே நேரத்தில் அந்நாட்டு மக்கள் நோயாலும், வறுமையாலும், பசியாலும் வாடி மடிந்தனர். வாழ்வதற்கு வீடின்றி தவித்தனர். தங்கள் கலாச்சாரம் எதுவென்று புரியாது திகைத்தனர்.

இந்நிலை மாற்ற கியூயா நாட்டு மக்கள் ஸ்பானிய ஏகாபத்தியத்திற்கு எதிராகப் போராடி 1888ல் வெற்றி கண்டனர்.

இந்த நிலையில் பசுத்தோல் போர்த்திய புலிபோல், கியூபாவுக்கு விமோசனம் அளிப்போனைப் போன்று அமெரிக்கா 1899ம் ஆண்டு கியூபாவிற்குள் நுழைந்தது. அத்தோடு ஸ்பானிய ஏகாதிபத்திய ஆட்சி முடிவடைந்து, அமெரிக்காவின் கொடும் சுரண்டல் ஆரம்பமாயிற்று. ''கியூபா தான் ஸ்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிய கடைசி நாடு'' என கியூபா பிரதமர் பிடல் காஸ்ரோ குறிப்பிட்டுள்ளார்,

அமெரிக்க ஏகாதிபத்திய சுரண்டல் இறுதியில் காஸ்ரோ தலைமையில் அந்த நாட்டு மக்களால் 1959ல் முறியடிக்கப் படும்வரை, கேவலமான முறையில் அந்த நாட்டில் நடைபெற்று வந்தது. இந்தக் காலங்களில் கியூபாவில் ஆட்சி புரிந்த அமெரிக்கக் கைப்பொம்மைகள் நாளுக்கு, நாள் காலத்துக்கு காலம் மாறினர். அதிகாரத்திலிருந்தவருக்கு எப்பொழுது மக்கள் மத்தியில் எதிர்ப்புக்கூடுகின்றதோ, அப்பொழுது அவர் அகற்றப்பட்டு, அவரின் இடத்தில் புதியவர் நியமிக்கப்பட்டார். ஏகாதிபத்தியங்கள் காலனி நாடுகளில் தமது சுரண்டலை நீடிப்பதற்காக கையாண்ட தந்திரங்களில் இதுவும் ஒன்று. ஆனுல் அதிகாரத்திலிருந்த ஆள் மாறிஞலும் அவர்களின் தன்மைகள் மாறவில்லை. கரடிக்குப்பதிலாக புலியும், அதற்குப் பதிலாக கொடிய சிங்கத்தையும் அமர்த்தும் ஏமாற்று வேலை அமெரிக்காவால் செய்யப்பட்டு வந்தது.

### வாழ்க்கை நிலை.

கியூபாவிலிருந்த விவசாய நிலத்தில் 72.5 வீதம் 8 அமெரிக்க சீனி உற்பத்திக் கம்பெனிகளுக்குச் சொந்தமாயிருந்தது. வங்கி, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், டெலிபோன், மின்சாரம் போன்ற சகல முக்கிய தேவைகளுக்குரிய உற்பத்திச்சாதனங்களும் அமெரிக்க, வெளிநாட்டு சொத்தாகவே இருந்தது. அந்த நாட்டுச் செல்வமெல்லாம் அன்னியர்களால் கொள்ளையடித்து அள்ளிச் செல்லப்பட்டது. இதனுல் அந்த நாடு பொருளாதார ரீதியில் நல்ல வளம் பெற்றதாக விளங்கிய பொழுதிலும், அப்பொருளாதார ஆதிக்கமெல்லாம் அன்னியருக்குச் சொந்தமாக, அவர்களுக்கு உதவி செய்வதாக இருந்தது.

அதே நேரத்தில் கியூபா நாட்டு மக்கள் அடிமைகளாக வாழ்ந்தனர். சொந்தத் தாய் நாட்டிலே அன்னியர்போல் அன்னிய சுரண்டல் கும்பலிஞல் நடத்தப்பட்டனர். ஆயிரமாயிரம் மக்கள் கேவலமான நிலையில் காடுகளிலும், மலைகளிலும் வாழ்ந்தனர். அவர்களின் நிலங்கள் எல்லாம் சுரண்டவந்த அன்னியர்களால் கரும்பு உற்பத்திக்காக கைப்பற்றப்பட்டன.

லட்சக் கணக்கான கியூபா நாட்டுப் பெண்களும், சிறு பிள்ளைகளும் சப்பாத்து என்பதையே அறியமாட்டார்கள். பள்ளிக்கூடம் செல்லவேண்டிய குழந்தைகளில் 40 சத விகிதத்தினர் பெயர்கூட எழுதத் தெரியாதவர்களாக வாழ்ந்தனர். ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளைப்போன்று கியூபாவிலும் கல்வி நிலை மிக மோசமானதாக இருந்தது. 95 சத வீதப் பெண்களும் பிள்ளைகளும் கொடிய வியாதிகளிஞல் கஷ்டப்பட்டார்கள்.

700,000 கியூபா நாட்டு மக்கள் வேலையின்றி இருந்தனர். 500 000 விவசாயிகள் வருடத்தில் 8மாதம் பட்டினி கிடந்தனர். 100,000மக்கள் அந்நியருக்குச் சொந்தமான நிலங்களில் வேலை செய்தனர். 200,000 மக்கள் சுகாதாரமற்ற குடிசைகளிலும், 200,000 மக்கள் வாடகைவீடுகளிலும் இருந்தனர். ஹவாஞ நகரத்தில் மட்டும் 247 விபசார விடுதிகள் இருந்தன.

### 12 பேரும் 7 துபபாக்கியும்

தாங்கமுடியாத இந்த இழிநிலையைப் போக்க கியூபா நாட்டு வீர இளைஞர்கள் சிலர் திரண்டெழுந்தனர். காஸ்ரோவின் தலைமையில் 1953ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம் திகதி மொன்காட் ராணுவ முகாமைத் தாக்கினர். புரட்சியின் முதல் வெடி இங்குதான் வெடித்தது. ஆனுல் இம்முறை அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. ஏகாதிபத்தியம் மக்களின் எழுச்சியின் முன்ஞல் தோல்வி காணும் என்னும் உண்மையை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

மீண்டும் 3 வருடங்களின் பின்ஞல் காஸ்ரோவின் தலைமையில் 80 இளைஞர்கள் மெக்சிக்கோவிலிருந்து கியூபாவிற்கு வந்து, ஏகாதிபத்திய, பிற்போக்கு பட்டிஸ்டா ஆட்சிக்கு எதிராகப் போர் தொடுத்தனர். இறுதியில் 12 பேரும் 7 துப்பாக்கியுமே மிஞ்சியது. அப்பொழுதும் அவர்கள் பயந்து ஓடிவிடவில்லை. சியரா மஸ்ரே என்ற மலைப்பகுதியில் ஓர் தளத்தை அமைத்து, அங்கிருந்து மக்களுக்கு கொரில்லா யுத்த முறைகளைப் பழக்கினர், போராடிவந்தனர். இறுதியில் 1959ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கியூபா நாட்டு மக்கள் அமெரிக்க வால்பிடி பட்டிஸ்டா ஆட்சியைக் கவிழ்த்தனர். 1963ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம் திகதி ஆரம்பித்த தமது இலட்சியப் பாதையில், தாயகத்தின் விடுதலையில், புரட்சியில் வெற்றி கண்டனர். ஜோசிபாட்டி, கபில்லோ போன்ற கியூபா நாட்டுவீரப் புதல்வர்களின் கனவை நனவாக்கினர்.

### புரட்சியின் பின்ஞல்

புரட்சி வெற்றி பெற்றதும் கியூபா நாட்டு மக்கள் கரை கடந்த ஆனந்தமெய்தினர். பிடல் காஸ்ட்ரோ தலைமையில் புதிய புரட்சி அரசாங்கத்தை, தொழிலாளர், விவசாயிகளின் ஆட்சியை நிறுவினர். சோஷலிஸத்தில், மாக்ஸிய லெனினிசத்தில் நம்பிக்கை தெரிவித்தனர். ஆனுல் கியூபா நாட்டு மக்கள் சுதந்திரமான சுபீட்ச பாதையில் முன்னேறுவதைக் காண, தன் அருகிலேயே தொழிலாளர் விவசாய ஆட்சியொன்று நடைபெறுவதைக் காண அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அதன் வால்பிடிகளுக்கும் வயிற்றெரிச்சலாக, பொறுக்கமுடியாத வேதனையாக இருந்தது. பலவிதத்தில் புதிய, புதுமை ஆட்சியை நெருக்கிவிட, ஒழித்துவிட ஏகாதிபத்தியம் முயன்றது. ஆனுல் உலக தொழிலாள வர்க்கத்தின், சோஷலிஸ் நாடுகளின், லத்தீன் அமெரிக்க மக்களின், விடுதலைப்பெற்ற நாட்டு முற்போக்குவாதிகளின் ஆதரவிஞல் ஏகாதிபத்திய சூழ்ச்சிகள் தடைகள் சுக்குநூருகின உடைத்தெறியப்பட்டன.

இன்று கியூபாவில் பெருமளவு கல்வி விருத்திசெய்யப்பட்டுள்ளது. நாடு பூராவும் பள்ளிக்கூடம் செல்லவேண்டிய வயதுள்ளவர்களுக்கு கல்விப் போதனை அளிக்கப்படுகிறது. ஐந்துஆண்டுகளுக்குள் பத்தாயிரத்திற்கதிகமான பாடசாலைகளும், மருத்துவமனைகளும் திறக்கப்பட்டுள்ளன. நிலமற்ற மக்களுக்கு நிலமளிக்கப்பட்டுள்ளது. வேலையற்ற மக்கள் என்ற பிரச்சினை இன்று பெயரளவில் கூட கிடையாது. இவற்றிற்கெல்லாம் காரணம் இன்று அந்த நாட்டிலுள்ள சகல உற்பத்திச் சாதனங்களும், பொருள்களும் மக்களுக்குச் சொந்தம்.

---

### வெள்ளவத்தை ஆலை தொழிலாளர்களின் கோரிக்கைகளில் சில

- விலக்கப்பட்டுள்ள சங்க உபதலைவர் அல்பட்டும் சோமபாலாவும் மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட வேண்டும்.
- தற்போதுள்ளசகலவாழ்க்கைப்படிகளும் தள்ளுபடி செய்யப் பட்டு 1-1-62 தொடக்கம் அரசாங்க அளவு பஞ்சப்படி வழங்கப்படவேண்டும்.
- பெண்களுடைய ஆகக் குறைந்த சம்பளம் ரூ. 1/15 சதமாக உயர்த்தப்பட வேண்டும். தேயிலை, றப்பர் ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்களுக்கு இத்தொகையே வழங்கப்படுகிறது.
- 1959ம் ஆண்டின் கூட்டு ஒப்பந்தம் 1-க்கு ஏற்ப 14 லைத்தியவிடுமுறை வழங்கப் படவேண்டும்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஆறுமுகம் செல்லையா கந்தசாமி, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
அச்சிட்டது: ஆர். ஜே. ஆர். அச்சகம், 90/1, கியூ வீதி, கொழும்பு 2.